# தொண்டன்



## உயிர்ப்பு விழாச் சிறப்பிதழ்

1987 ★ சித்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

சித்திரை — 1987
மலர்: 19 இதழ்: 3

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.
SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 3/25
ஆண்டுச் சந்தா ரூபா 35/-

உள்ளே..

1. இதயத்திலிருந்து — 1
2. கிறிஸ்துவைப் பாடிய — 2
3. ஆயரின் செய்தி — 3
4. இன்றும் நிகழட்டும் — 4
5. மரத்துப்போன இதயம் — 6
6. விவிலியம் கூறும் — 9
7. இளைஞர் அரங்கம் — 12
8. செய்தி முரசு — 15
9. ஒளி இழந்த வாழ்வை — 17
10. கவிஆரம் — 19
11. சர்வதேச கத்தோலிக்க — 21
12. பொது நிலையினரின் — 23
13. சொந்தம் எப்போதும் — 25
14. குறுக்கெழுத்துப் போட்டி — 27

**பழைய பிரதிகள் தாரீரோ !**

1969ம் ஆண்டு முதல் 1983ம்ஆண்டுவரை வெளிவந்த தொண்டன் பிரதிகளை பாதுகாத்து வைத்திருக்கும் வாசகர்கள் தயவுசெய்து எம்மோடு தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறோம். குறிப்பிட்ட காலப் பிரதிகள் கைவசம் இல்லாமையால் அவற்றைப் பெற்றுக்கொள்ள நாம் விரும்புகிறோம். பிரதிகள் வைத்திருப்போர் அவற்றை எமக்கு அளிக்க விரும்பினல் வைத்திருக்கும் பிரதிகள் எண்ணிக்கையையும் ஆண்டு, மாதம் முதலியவற்றையும்குறிப்பிட்டு எமக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்து உயிர்த்தெழ வில்லையென்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே உங்கள் விசுவாசமும் பொருளற்றதே.

கொரி: 5/13-14



# இதயத்திலிருந்து . . .

வாழத்துடிக்கின்ற மனிதனுக்கு நோவுகளும், சாவுகளும், அழிவுகளும் என்றுமே ஒரு சவாலாக இருக்கிறது. இன்றைய உலகில் சமூக, அரசியல், பொருளாதார காரணிகளால் மனிதனை வாட்டிவதைக்கின்ற துன்பங்கள் பூதாகரமாக உருவெடுத்துள்ளன. ஆனால், கிறீஸ்துவை மீட்பராகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டுள்ள ஒருவனுக்கு அழிவுகள் கூட ஓர் அர்த்தம் கொடுக்கும், நோவுகள் கூட ஒரு செய்தி சொல்லும். இறப்பிலும் கூட வாழ்வில் நம்பிக்கை பிறக்கும். இவ்வுண்மையைச் சொல்லாமல் சொல்லி உயிர்த்தஞாயிறு உதிக்கின்றது.

வாழ்க்கை என்றுமே அழிவதில்லை அழிவிலும் வாழ்வுண்டு. அந்த நம்பிக்கையின் முதற்கனி கிறீஸ்து. இதைத்தான் ''நானே வாழ்வு'' என்றாரவர்.

வாழ்வுபற்றிய இந்நம்பிக்கை அனைத்து மட்டத்திலும் பரவவேண்டும். தொடர்புச் சாதனங்களுக்கு இதில் பாரிய பங்குண்டு. தொடர்புச் சாதனங்கள் மக்கள் வழி உறுதிப்படுத்தப்படல் வேண்டும். கிறீஸ்து தாம் உயிர்த்ததை ஒரு பெண்ணின் மூலமாக மற்றவர்களுக்கு அறிவித்ததாக நற்செய்தி கூறுகிறது. சீடர்கள்வழி நாவுக்கு நாவு தாவிப்பரவியது நற்செய்தி.

தொண்டனும் தன்சேவை பலன்தர தனது வாசகர்களிடமிருந்து இந்தத் துணிவைத்தான் எதிர் நோக்குகின்றான்.

சி. பி. இராஜேந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்துவைப் பாடிய

# அறிஞர் வி. க.

அன்பு நெறி சிறந்ததென
 அகில முணர்ந் துய்ய
ஆண்டவனே என் செய்தாய்
 அதை நினைத்தால் அந்தோ !
என்புருகும் உயிருருகும்
 எண்ணமெல்லாம் உருகும்
எம்மொழியால் இயம்பவல்லேன்
 ஏழைமகன் அப்பா !
மண்ணுலகில் அவதரித்தாய்
 மக்களிடை வதிந்தாய்
மறை மொழிந்தாய் அவ்வளவில்
 மனம் நிறைய இலையோ?
பொன்னுடலை வதைக்கவிட்டாய்
 பொலியுயிரை நீத்தாய்
பொறையன்பு நீயென்னும்
 பொருண்மை தெளிந்தேனே!

(உலகெலாம் — 6)

வாளேந்திப் போர்புரிந்த
 வாகையரும் மாண்டுவிட்டார்
வாளேந்தாக் கிறிஸ்துவே நீ
 மரித்தெழுந்தாய் வீரவள்ளல் !
வாளேந்தும் வழியுழன்றேன்
 வழிகண்டேன் மரித்தெழுவேன்
வாளேந்தா நெறிவளர்க்க
 மலரடியில் அடைக்கலமே

(அலகிலொளி — 10)

கிறிஸ்த்தவரல்லாத அறிஞர் வி கல்யாணசுந்தரமுதலியார் கிறிஸ்துவை அறிந்து, உணர்ந்து அனுபவித்தவர். அந்த அனுபவ உணர்வை 'கிறிஸ்துவின் அருள் வேட்டல்' "என்ற நூலுருவுவில் வடித்துள்ளார். அவரே எனது நெஞ்சம் கிறிஸ்து பெருமானை நினைக்கும் செபத்தில் திளைக்கும். செபத்தால் மனந்திரும்பல், முறையீடு, அழுகை, மன்னிப்பு, வேறு முதலியவற்றின் நுட்பங்கள் நாளடைவில் எனக்கு அனுபவத்தில் விளங்கின. அவ்வனுபவ விளக்கம் பாடல்களாகியது.'' என்று குறிப்பிடுவதிலிருந் புலனாகிறது.

> உண்மை சோதிக்கப்படும்போது அதன் மதிப்பு உயருமே ஒழியக் குறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயரின் செய்தி

கிறீஸ்துவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு என்ற மறை நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு நிறைவை அடைந்திருக்கும் நாம், புனித இராயப்பர் ஆதிக் கிறீஸ்தவர்களுக்கு எழுதிய ஆழமான கருத்துக்களை இன்று சிந்தையில் இருத்த வேண்டும். அவர் கூறுகின்றார். கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்றபோது, தம்முடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றுமாறு, முன்மாதிரிதந்து சென்றார்."

(1 இராயப்பர் 2/21)

வாழ்க்கை என்ற பயணத்திலே கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்ற எமக்கு,

அவரே வாழ்வின் வழிகாட்டியாகவும்
அவரே வாழ்வின் மையமாகவும்
அவரே வாழ்வின் இலக்காகவும் இருக்கின்றார்.

ஏனெனில், **இறப்பின் மூலந்தான் மனிதன் உயிர்ப்பு** எனும் வெற்றி வாகையைச் சூடிக் கொள்ள முடியும் என்ற தனிப்பெரும் தத்துவத்தை தந்து சென்ற பெருமை கிறிஸ்துவையே சாரும்.

இழிவுக்கு உட்படுத்தப்பட்ட சிலுவை மரணம்
கிறிஸ்துவின் வாழ்வுக்கு முடிவாக அமையாமல்
அவரது மாட்சிமை வாழ்வின் முதல்படியாக மாறியது.
அவரது உயிர்ப்பு ஒரு மாபெரும் வெற்றி.

சாத்தானின் மீது வெற்றி — பாவத்தின் மீது வெற்றி — சாவின் மீது வெற்றி.

வெற்றி வீரன் கிறிஸ்து காட்டிய வீர வழி எம் வாழ்விலும் ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டும். அவரது பாடுகளும் இறப்பும் எமக்கு ஒரு பாடம். அவரது சிலுவை எமது வாழ்வின் அடையாளம். அவரது உயிர்ப்பு எமது நம்பிக்கையின் ஆதாரம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பானது சீடர்களுக்கு இழந்திருந்த நம்பிக்கையை மீண்டும் பெற்றுத்தந்தது. இன்று துன்பமென்னும் துயரக்கடலில் நீந்தி படிப்படியாக நம்பிக்கையை இழந்து, சாகாமலே செத்துக்கொண்டிருக்கும் அனைவருக்கும் அவரது உயிர்ப்பு நம்பிக்கையின் விடிவெள்ளியாக துலங்கட்டும். புனித சின்னப்பரோடு சேர்ந்து "மண்ணைச் சார்ந்தவனின் சாயலை நாம் தாங்கியிருப்பது போல விண்ணைச் சார்ந்தவனின் சாயலையும் தாங்கியிருப்போம்! என நம்பிக்கையுடன் அறிக்கையிடுவோம்.

உயிர்த்த யேசுவின் அருளும் ஆசியும் உங்களுக்கு உரித்தாகட்டும்.

✠ பேரருட்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
திரி./மட். மறைமாவட்ட ஆயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் நிகழும் உயிர்ப்புக்கள்



புதிய ஓர் உலகம் பிறந்துள்ளது; புதிய ஒரு வாழ்வு விடிந்துள்ளது. கிறீஸ்து உயிர்த்தார்; கிறீஸ்து உயிர் வாழ்கிறார். — 1977ஆம் ஆண்டு திருத்தந்தை 6ம் சின்னப்பர் உலகிற்கெல்லாம் வழங்கிய உயிர்ப்பு விழாச் செய்தியின் இறுதிப்பகுதி இது. உயிர்ப்பு என்றதும் பொதுவாக நம்மனதில் தோன்றும் காட்சிகள் இரண்டு; ஒன்று இயேசுவின் உயிர்ப்பு; ஏனையது இறுதி உயிர்ப்பு. யேசுவின் உயிர்ப்பு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது இறுதி உயிர்ப்பு என்பது எல்லாருக்கும் உலக வரலாற்றின் முடிவில் நிகழ இருப்பது.

ஆனால் உயிர்ப்பு என்பது கடந்த காலத்தைப் பற்றிய ஒரு நினைவு மட்டுமன்று; எதிர் காலத்தைப் பற்றிய வெறும் கனவுமன்று. அதன் முழுப்பொருளில் நோக்கும்போது இயேசுவின் வாழ்வில் தொடங்கும் உயிர்ப்பு இன்றும் தொடரும் ஒரு நிகழ்ச்சி, என்றும் தொடர வேண்டிய முழு வளர்ச்சி. ஏனெனில், இயேசுவின் உயிர்ப்பு என்பது தனிமனிதர் ஒருவரது வாழ்வின் நிறைவு மட்டுமன்று. அது புதியதொரு உலகின் படைப்பு. புதிய மனித உறவுகளின் பிறப்பு. சாவின் சக்திகளுக்கு அது முடிவு சகோதரத்துவ சமூகம் எனும் இறையரசுக்கு அது விடிவு. இயேசுவின் உயிர்ப்பு என்பது அதுபெற்ற முழு வெற்றியின் முழக்கம். இறைவனது அருளாட்சியின் தொடக்கம். இனி இவற்றிற்கு என்றுமே முடிவில்லை.

சுவாமி D. அல்போன்ஸ்
திருச்சி.

## குறை நம்பிக்கையும் மிகை நம்பிக்கையும்

இயேசுவின் உயிர்ப்புப்பற்றி இருவகையான தவறான சிந்தனைகள் பரவலாக நிலவுகின்றன. அவற்றை நாம் உயிர்ப்புப் பற்றிய குறை நம்பிக்கை, மிகை நம்பிக்கை என இனம்பிரித்து நோக்கலாம். குறை நம்பிக்கை என்பது பகுத்தறிவுப் பாணியில் உயிர்ப்பினை விளக்க முயலும் சிந்தனையாளர் சிலரிடம் காணக்கிடப்பது. மிகை நம்பிக்கையானது பொதுவாக சாதாரண கிறீஸ்தவ மக்களின் மரபுச் சிந்தனையில் இடம் பெறுவது.

வெறும் பகுத்தறிவு அடிப்படையில் சிந்திக்கும் சிலருக்கு யேசுவின் உயிர்ப்பு என்பது ஒருவகைப் புராணம். புராணம் என்பதால் அது அர்த்தமில்லாத ஒரு புனைகதை எனப் பொருளன்று. மாறாக, சாதாரண அல்லது அன்றாட மொழி மரபுகளில் சொல்ல இயலாத ஆழ்ந்த அர்த்தங்களையும் வாழ்வின் அடிப்படை ஆழங்களையும் பல்வேறு அடையாளங்கள் வழியாகச் சொல்ல முயலும் ஓர் உருவக மொழி வகையே புராணம் என்பது. எனவே இந்த அணுகுமுறையில் இயேசுவின் உயிர்ப்பு என்பது ஓர் உருவகம். உண்மையில் அது சொல்ல விழைவது இயேசு எனும் ஆளின் உயிர்ப்பையன்று; மாறாக அவரது கொள்கைகளின் குறிக்கோள்களின் உயிர்ப்பை, எந்த மதிப்பீடுகளுக்காக இயேசு வாழ்ந்தாரோ இறந்தாரோ அந்த மதிப்பீடுகள் அவரது சாவுடன் சமாதி அடைந்து விடுவதில்லை. ஆம் இயேசு இறந்துவிட்டார்; இன்று அவர் இல்லை. ஆனால் இவ்வுலகில், குறிப்பாகத் தன் சீடர்களின் இதயங்களில், அவர் நட்டுவைத்த அன்பு, எளியோர் பால் பரிவு. சமத்துவம், சகோதரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம், சுதந்திரம் என்னும் அடிப்படை மனிதப் பண்புகள் இறந்துவிடவில்லை. மாறாக, இறப்பால் இயேசு தன் உயிரையே நீராகப் பாய்ச்சி அவற்றிற்கு உயிரூட்டியுள்ளார். இவ்வாறு உண்மையில் உயிர்த்தது இறந்த இயேசு அன்று; மாறாக அவரது வாழ்வுக் கனவுகள், பணியின் குறிக்கோள்கள், இவற்றின் மீது அவரது சீடர்கள் கொண்டிருந்த பற்றுறுதி அல்லது விசுவாசம். அன்று மட்டுமன்று இன்றும் யேசுவின் வாழ்வு, இறப்பு இவற்றின் நினைவு நிலைக்கிறது. அநீதிகளின் வேரறுக்கும் ஒரு புரட்சிச் சக்தியாக, புதிய விடுதலை முயற்சிகளுக்கு வித்தாக, மனிதனை மனிதனாக வாழ, வளரவைக்கும் சகோதரத்துவ சமூக அமைப்புக்களின் பிறப்பிடமாக இன்றும் அது விளங்க இயலும். விளங்கவும் செய்கிறது. இதுதான் யேசு உயிர்த்தார், இன்றும் உயிர் வாழ்கிறார் என்பதன் பொருள் என்பர், அந்த பகுத்தறிவுவாதச் சிந்தனையாளர்.

மரபுக் கிறீஸ்தவ சிந்தனையில் ஊறியிருக்கும் பலரது சிந்தனையோ இன்னொரு வகையானது. இவர்களது எண்ணப்படி உயிர்ப்பு என்றால் அது இறந்து கல்லறையில் வைக்கப்பெற்றிருந்த இயேசுவின் உடல் மீண்டும் உயிர் பெறுவது அதாவது இறப்பில் பிரிந்த இயேசுவின் ஆவி கல்லறையில் இருந்த இயேசுவின் உடலுக்குள் மீண்டும் வந்து கூடுகிறது. இழந்த உயிரை மீண்டும் பெற்ற அந்த உடலானது முன்புபோல் இவ்வுலக வாழ்வைத் தொடருகிறது. இவ்வாறு உயிர்பெற்ற இயேசு முன்புபோல் உண்கிறார். உடன் நடக்கிறார். உரையாடுகிறார். உடலில் பதிந்த காயங்களைக் காட்டுகிறார். அவற்றில் கைவிட்டுப் பார்க்கத் தோமையாரை அழைக்கிறார். இந்தக் கண்ணோக்கில் இயேசுவின் உயிர்ப்பு என்பது பெருமளவுக்கு இலாசர் உயிர் பெறுவது போன்ற இன்னொரு நிகழ்ச்சி.

## உயிர்ப்பின் உண்மைப்பொருள் இவையல்ல.

மேற்கூறிய இரண்டு விளக்கங்களுமே நாம் ஏற்கக்கூடியவை அல்ல. ஏனெனில் உண்மைக் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு இவை இரண்டுமே உடன் வராதவை. ஊறுவிளைவிப்பவை. முதல் விளக்கம் உண்மையாகவே ஏற்றுக்கொள்வது இயேசுவின் உயிர்ப்பை அல்ல. மாறாக அவரது மனப்பான்மையின், மதிப்பீடுகளின் உயிர்பை, ஆனால் கிறீஸ்துவ விசுவாச அனுபவம் கூறுவது என்ன? இயேசுவின் எண்ணங்களும் கனவுகளும் சீடர்களது மனதிலும், வாழ்விலும் புத்துயிர் பெற்றன என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் அவர்களுக்குக் கிடைத்த உயிர்த்த இயேசுவின் உள்ளார்ந்த அனுபவம் தானே! புனித சின்னப்பரே இதனை வலியுறுத்திக் கூறுகிறார். "கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே. உங்கள் விசுவாசமும் பொருளற்றதே. நாங்களும் கடவுளின் சார்பில் பொய்ச்சாட்சி சொல்பவர்கள் ஆவோம். *(1 கொரி. 15 : 14-15)* எனவே உயிர்ப்பு பற்றிய பகுத்தறிவு விளக்கம் நாம் ஏற்க இயலாத ஒன்று.

கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவலாக நிலவும் இரண்டாவது விளக்கம் இயேசுவின் உயிர்ப்பைப் புரிந்துகொள்வது உயிர்ப்பாக அன்று. மீண்டும் உயிர் பெறுவதாக, இறந்த இயேசுவின் உடல் உயிர் பெற்று மீண்டும் இவ்வுலக வாழ்வைத் தொடர்வதாகக் கருதும் சிந்தனை முறையும் நாம் ஏற்க இயலாதது. ஏனெனில் உயிர்ப்பு என்பது இவ்வுலக வரலாற்று வாழ்வின் தொடர்ச்சி அன்று. அது இவ்வுலக வாழ்வின் நிறைவு. இறைத் தந்தையுடன் இயேசு கொள்ளும் முழு உறவு. வரலாற்றில் வாழ்ந்தவர் தனது இறப்பு - உயிர்ப்பு வழி வரலாற்றைக் கடந்தவராகிறார்; காலநில வரம்புகளுக்கு உட்பட்டவராக வரலாற்றில் வாழ்ந்த இயேசு தனது இறப்பு உயிர்ப்பால் இறைத் தந்தையுடன் ஒன்றித்து அந்த ஒன்றிப்பால் எக்காலத்தவர்க்கும், எந்நாட்டவர்க்கும் உறவாகிறார்.

— (தொடரும்)

> எல்லாவற்றையும் மனிதன் குழப்பிவிட்டான். அவனால் கடவுளை மட்டும் குழப்ப முடியவில்லை. அதனால்தான் உலகம் இன்றளவும் அழியாமலிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்துப் போன இதயம்

ஒளியை எதிர்பார்த்து
இருளில் இருப்பவனின்
விழிகள் குருடானல்...
வாழ்வே இருளாகும்
விழிகள் இருண்டவன் முன்
விளக்கேற்றி என்ன பயன்?
ஒளிதான் வந்தென்ன
இருள்தான் இருந்தென்ன.

ஓ. கே. குணநாதன்

இரவு ஆரம்பமான குண்டு வெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுக்களும், இடையிடையே பறக்கும் ஹெலிக்கொப்டர் ஒலியும், காதைப் பிளக்கும் குண்டு வீச்சு ஓசைகளும் இன்னும் ஓய்ந்த பாடில்லாமல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. இந்தச் சத்தங்களைப் பற்றி 'வோர் டே' பத்திரிகையில் வாசித்து அறிந்து கொண்டாலும், நேரடியாக ஆரம்பத்தில் கேட்கும் போது சங்கடமாய் இருந்தாலும், படிப்படியாக எல்லாம் புளித்த பால் போல் ஆகிவிட்டன.

எப்போது வாழ்க்கை விடியும் என்று தவித்துக் கொண்டிருந்த முனியம்மா, இரவு கேட்ட வெடிச் சத்தத்தினல் நிம்மதியற்று நித்திரையிழந்து வாசல்படியில் அமர்ந்த வண்ணம் பொழுது எப்போது விடியும் எனக் காத்திருந்தாள்.

பொழுது புலர்ந்து கொண்டு வந்தது. அந்த நேரம் பார்த்தாற் போல் தெருவினிலே இரண்டு மூன்று பேர் ஓடி வரும் சத்தம் தெளிவாக கேட்கிறது. இந்த நேரத்தில யார் ஓடி வருவது. சில நேரங்களில் பெடியன்களாக இருக்குமோ? அல்லது ........? முனியம்மா நினைவைத் தொடர்வதற்கிடையில் நான்கு பொடியன்கள் முண்டியடித்துக் கொண்டு முனியம்மாவின் வளவிற்குள்ளேயே நுழைகிருர்கள்.

வளவினுள் நுழைந்த பொடியன்களையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். வயது பதினைந்தையோ பதினறையோ அடையாளம் காட்டும் தோற்றம், அரும்பு மீசை.

நான்கு பேருடைய கைகளிலுமே முட்டை போன்ற அமைப்புடைய ஏதோ பொருள் வைத்திருந்தனர். மற்றக் கைகளிலும் ஏதோ பத்திரிகையும் பசை வாளியும் வைத்திருந்தனர்.

துள்ளித் திரிந்து விளையாடி, பெற்றோரின் அரவணைப்பில் இருக்கவேண்டிய வயதில் இப்படியொரு விரக்தியா? அவர்களுடைய வாழ்க்கையை பற்றி நினைத்ததும் அவளது மனம் பாறையாக்கனக்கிறது.

"ஆச்சி கொஞ்சம் தண்ணி தாறீங்களா குடிக்கிறதிற்கு" என்ற வார்த்தையைக் கேட்டு சுய நினைவு பெற்றவளாக தண்ணீரை எடுத்து வந்து கொடுக்கிருள். தண்ணீரைக் குடித்து விட்டு நன்றிப் பெருக்கோடு வெளியேறிக் கொண்டிருந்தனர் அவர்களின் கழுத்தினிலே கட்டப்பட்டிருந்த கறுப்பு நூலும் அதனில் தூங்கும் வெள்ளைநிறக் குப்பியும் அவள் கண்களில் தென்படுகிறது. அதைத் தொடர்ந்து அவள் சிந்தனையும் போகிறது. அப்படியானல் அதுதான தற்கொலைக் குப்பி எனப்படுவது? அதை நினைக்கையில் அவர்களுக்காக அவளின் உதிரத்தில் இருந்து இரண்டு கண்ணீர்த் துளிகள் விழுந்து தெறிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத் தொடர்ந்து அவளின் நினைவலைகள் மகனைப் பற்றி வட்டமிடவே, மெதுவாக எழுந்து சென்று குடிசையின் ஒரு மூலையில் கிடந்த அந்த 'எயா மெயில் கவரிற்குள்'' இருந்த மகனின் கடிதத்தை எடுத்துப் படிக்கிறாள்.

முன்னொரு காலத்திலே லாலா நாட்டிலிருந்து எந்தவொரு தீர்க்கமான முடிவோ, முன்னேற்பாடோ இல்லாமல் விஜயனை தன் தகப்பன் அனுதையாக்கி இலங்கைக்கு அனுப்பியது போல், இலங்கை மண்ணில் இருந்து இங்கு நான் அகதியாக வந்துள்ளேன். அகதியாக வந்தாலும் இங்கு நான் ஆறுதலாக இருக்கிறேன். இக்கரையை அடைந்த பின்பு தான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கிறேன். ஏன் அப்படி எழுதுகிறேன் என்று சிந்திக்கிறீர்களா? சுதந்திரம் என்ற போர்வையிலே அடிமை வாழ்க்கையில் சிக்குண்டு அல்லல் பட்டதை எண்ணிப் பார்க்கும் போது வாழ்க்கையை ஆரம்பிக்கும் போதே அடிமையாக பேணப்பட்ட நாம், காலஞ் செல்லச் செல்ல வீட்டிலிருந்து வெளியே செல்ல முடியாத அடிமை வாழ்க்கையாகி, இன்று வீட்டினிலேயே சீவிக்க முடியாத நிலைக்கு உயர்த்தப் பட்டுளோம். சுதந்திரமாக ஒரு மீன்பிடித் தொழிலையாவது கூட செய்வதற்கு கடல் பிராந்தியத்தில் போடப்பட்ட பாதுகாப்பு வலையத்தால் தடை. பார்க்கப் போனால் எல்லாமே வெறும் அடிமை வாழ்க்கை.

அம்மா, ஒரு சில நிமிடங்களில் எரிந்து சம்பலாகி மதிப்பற்ற பொருளாகி விடப் போகின்ற வீடு வளவையே விற்று, வீட்டிலேயே திருமணம் ஆகாமல் காத்துக் கிடக்கும் அக்காவின் நிலைமையைப் பற்றிச் சிந்திக்காமல், ஒரு மனிதன் பாடுபடுறதே தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவே என்ற எண்ணத்தில் என்னை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த உங்கள் அன்பை எப்படி கூறுவதென்றே தெரியவில்லை.

இந்த உலகத்தில வாழ்கிறவங்க எல்லோரும் நிம்மதியாக வாழ்ந்திட வேண்டும் என்று தான் நினைக்கிறாங்க. ஆனால் நிம்மதி கிடைக்குமா என்ற ஏக்கத்தோடயே மடிஞ்சும் போயிடுறாங்க. இந்த ரகத்தோடயே உங்கள் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்து...

# சிறுகதை

அந்தக் கடைசி வரிகளை வாசித்து முடிக்க முன்னமே, அவளது நினைவலைகளும் முன்னோக்கி பறக்கிறது.

ஆயிரத்து எழுநூற்றி தொண்ணூற்றி ஆரும் ஆண்டு தென்னிந்தியாவில் இருந்து வெள்ளைக்காரர்களால் மலையகம் நோக்கி அழைத்து வரப்பட்டவர்களே முனியம்மாவின் பரம்பரை. காலப் போக்கில் காலடிகள் படாத புட் புதர்கள் நிறைந்த காடுகள் எல்லாம் இவர்கள் கைகளால் வளமாக, இவர்கள் வாழ்க்கை அடிமைச் சமூகமாக உருமாறியது.

காலம் விரைந்தோடியது. முனியம்மா கல்யாணமாகி இரு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு இனிமையாக வாழ்ந்து வந்தாள். அந்த நேரம் பார்த்தாற் போல் வந்தது 1983 யூலை.

இலாப வேட்டைக்காரர்களின் சதியினால் வீடுகள் உடைக்கப்பட்டு, உடமைமைகள் சூறையாடப்பட்டன. தீப்பிளம்புகள் உறைவிடங்களைக் கருக்கிச் சாம்பலாக்கின. முனியம்மாவின் கணவன் அவள் கண் முன்னே கண்டதுண்டமாக வெட்டி...

எப்படியாவது பிள்ளைகளைக் காப்பாற்றி விடவேண்டுமென்ற நப்பாசையில் கணவனை இழந்து உடைமையை இழந்து அகதியாய் புகலிடம் தேடி மட்டக்களப்பின் ஒரு மூலையில் அமைந்துள்ள சத்துருக்கொண்டான் கிராமத்தில் குடியமர்ந்து கொண்டாள்.

அங்கே வாழமுடியாமல் தத்தளித்து இங்கு வந்த அவளுக்கு இங்கு பயங்கரவாதம் பெரும் தலையிடியாக மாறியது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. அதிகாலை வேளை ஊரைச் சுற்றி வளைத்துத் தேடுதல் வேட்டை நடாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர்களின் கையில் குரங்கின் பூமாலையாய் அகப்பட்டுக் கொண்ட மகன் ராஜன் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

காலம் கடந்தது. ஆனால் ராஜன் விடுபடவேயில்லை. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வெயில் காலைச் சுட்டெரிக்க வெயில், மழை, பனியைப் பொருட்படுத்தாது முகாமின் வாசலிலே தவம் கிடந்தாள். ஆனால் கிடைத்த பதிலோ ''ஆள் இங்கே இல்ல. ஆள் செத்துப் போச்சு'' பதிலைக் கேட்டதும் முனியம்மா நெருப்பில் இட்ட புழுப்போல் சுருண்டாள், துவண்டாள், அவளுக்கு என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல் திண்டாடினாள்.

அருகே அமைந்திருந்த புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று அங்கே சிலுவையிலே அறையப்பட்டு கறை படிந்து காணப்பட்ட யேசுவின் பாதங்களில் நீங்களே தஞ்சமென்று விழுந்து மன்றாடினாள். ''கர்த்தரே! கருணை வடிவானவரே! ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பவர் நீரே என்ற ரீதியில் உன்னை மண்றாடுகின்றேன். எல்லாம் வல்ல இறைவா, என் மகன் இறந்துவிட்டதாக கூறுகின்றார்களே, அந்த மகனை மீண்டும் மீட்டுத்தரமாட்டாயா? கதி கலங்கி நிற்கும் என் குடும்பத்திற்கு ஒளியேற்ற மாட்டாயா? கர்த்தருக்குள் மரிப்பவர்கள் பாக்கியவான்கள் என்று நீர் கூறலாம். ஆனால் அநீதியைக்களைந்து நீதியை நிலைநாட்டுவதற்காக நீரும் அடித்து ஒடுக்கப்பட்டு துன்பச் சுமைகளைச் சுமந்து, சொல்லொண்ணாத் துயரங்களுக்குட்படுத்தப்பட்டு மரித்துப்போய் மீண்டும் பாவிகளை இரட்சிப்பதற்காக உயிர்த்தெழுந்தனையே. இதேபோல எனது மகனையும் மீண்டும் பெற்றுத்தாரும்.''

> ஆண்டவனுக்குள் நீ வாழும்போதுதான் நீ யார் என்பதை நீ தெரிந்துகொள்வாய்.

உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்தன்று ராஜன் அடித்து, ஓடித்த நிலையில் விடுதலை செய்யப்பட்டான். அதுவும் மறுபிறப்பு எடுத்தது போல்.

அதன் பிறகு ஒரு நிமிடங்கூட இந்த ஊரில் அவனை வைத்திருக்க அவள் விரும்பவில்லை. ஏன் இந்த நாட்டில் கூட. எனவே அவளிடம் உள்ள ஒரேயொரு சொத்தான வீட்டை விற்று இந்தியாவுக்கு அனுப்பி வைத்தாள்.


''என்ன முனியம்மா கடுமையான யோசனையில இருக்கின்றா?'' என்றதரகர் சின்னத்தம்பியின் குரல்கேட்டு சுயநினைவிற்கு வந்தாள் முனியம்மா.

''இந்த நாட்டில யாருக்குத்தான் யோசனை இல்ல.'' என்றவாறு பெருமூச்சுடன் பதிலளித்தாள் முனியம்மா. ''சரி சரி அதெல்லாம் விட்டுப் போட்டு... நான் வந்த என்னெண்டா முனியம்மா இந்த முறை உண்ட மகள் ஜானகிக்கு நல்லதொரு மாப்பிள்ளை பார்த்திருக்கிறன். பொடியன் எண்டா அருமையான குணம். நல்ல வடிவும். அதோட சீதனமும் அதிகமில்ல. பத்தாயிரம் ரூபாக் காசும் வீடுவளவும் குடுத்தாப் போதும்...''

''சின்னத்தம்பி அண்ணன் நான் இப்ப ஒரு முடிவுக்கு வந்திருக்கன். இவ்வளவு நாளும் நான் ஒரு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லி எவ்வளவு கஷ்டப்படுத்தியிருப்பன். ஆனா தம்பி பிடிபட்டு போய் வந்ததோட அந்த முடிவையே மாத்திப் போட்டன். அங்க நான் கண்ட ஒவ்வொரு காட்சிகளும் என் நெஞ்சைக் கல்லாக்கிப் போட்டுது. வாழ்வுக்கு விதியில்லாமல் கணவனை இழந்து விதவையாய் வந்து நின்று அழுதவர்கள்தான் எத்தனை. காதலனை இழந்து கண்ணீர்விட்டு அழுதவர்கள்தான் எத்தனை எத்தனை இதைப் போல இன்னும் எத்தனை பேர் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் இருந்து மௌனக் கண்ணீர் வடிக்கின்றனர். இந்த நாடு இருக்கிற சூழ்நிலையில எண்ட மகளுக்கும் கல்யாணம் செய்து வைத்து அவளை விதவையாக்க விரும்பல்ல. அதனால அவளுக்கு கல்யாணமே தேவையில்ல. அநீதியும் அட்டூழியங்களும் செத்து ஒரு நீதியான சமூகம் உயிர்த்தெழும் வரைக்கும் கன்னியாகவே வாழட்டும்'' என்று கூறி நிமிர்ந்து பார்த்தாள் முனியம்மா கிழக்கு வானில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவிலியம் கூறும்

# இறைவன்

— றெக்ஸ் ஜோசப் —

தாய்மையைப்பற்றி விளக்கும் சாஸ்திரங்கள் பல உண்டு. உயிரியல், விலங்கியல், பௌதீகவியல், இரசாயனவியல் போன்ற விஞ்ஞானங்கள் கூடத் தாய்மையின் இயல்பையும் அதிலுள்ள பௌதீக, விஞ்ஞான, உயிரியல் கூறுகளையும் மாற்றங்களையும் வளர்ச்சியையும் பற்றி அணுவணுவாக விளக்குகின்றன. தாய்மையின் இயல்பை உயிரியல் விளக்கலாம். தாய்க்கும் கருவுக்குமுள்ள தொடர்பைப் பௌதீகம் விளக்கலாம். தாய்ப்பாலின் மூலக்கூறுகள் என்னவென்பதையே இரசாயனம் பிரித்துப் பிரித்து விபரிக்கலாம். ஆனல் பௌதீக, இரசாயன, உயிரியல் விளக்கங்கள் மூன்றும் தாய்மையை முழுமையாக விளக்குமா? அல்லது உலகிலுள்ள அத்தனை சாத்திரங்களும் சேர்ந்துதான் தாய்மையை தங்கள் தங்கள் கோணங்களில் விளக்கினலும், தாய்மையை முழுமையாகக் காட்டுமா? இல்லை. இவையெல்லாம் ஒன்ருகக் கலந்து, சமைந்து வாழுகின்ற ஒரு தாயே தாய்மையை நிறைவாகக் காட்டமுடியும். ஆம் வாழும் தாயே தாய்மைக்கு முழுமையான வியாக்கியானம்.

அதுபோலவே தான் இறைவனும். எந்தவொரு இறையியல் நூலும், இறைவன் பற்றிய தத்துவ விளக்கமும், உண்மையாகவும், முழுமையாகவும், இறைவனை அவரது இயல்பிலும், முழுமையிலும் காட்டமுடியாது. வாழும் இறைவன் தன்னை வெளிப்படுத்தும் போதே மனிதனல் அவரை முழுமையாக முடியாவிடினும், சிறிதளவேனும் உண்மையாகப் புரிந்துகொள்ளமுடியும். எத்தனையோ பண்டைய இறையியல் இலக்கியங்கள் இறைவனைத் தத்துவத்தால் விளக்க முற்பட்டுத் தோல்வி கண்டு (ஆனல்) அவற்ருல் காட்ட முடிந்ததெல்லாம் உயிரற்ற, துடிப்பற்ற, கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாத்தூரத்திலுள்ள ஒரு வெறும் முழுமையைத்தான். மனிதனல் அதை உணர்ந்து வியக்க முடிந்ததேயொழிய அதனை விரும்பவோ அன்றேல் அணுகவோ அதனுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவோ முடியவில்லை.

விவிலியத் திருமறை நூல் காட்டும் இறைவன் உயிரற்ற பூரணமும் அல்ல, உலகை இயக்கும் இயங்காச் சூத்திரமும் அல்ல. அவர் வாழும் இறைவன், மனிதனில் இயங்கி வரலாற்றை இயக்கும் இயக்குனர், இயற்கையைப் படைத்து மனிதனைப் போஷிக்கும் தந்தை, உலகில் தன் கால்மனையைப் போட்டு உள்ளத்தில் கொலு வீற்றிருக்கும் பூரண அன்பு. அவர் அகறிணை அல்ல அவர் ஒரு ஆள். அவர் அருபியானலும் அவரது முன்னிலைப்பாடு சதா உணரக்கூடியது. உலகைப் படைத்து முடித்துவிட்டபின் நித்திய ஓய்வெடுக்கும் இயங்காத பூரணமல்ல இறைவன் மாருக அல்லும் பகலும் உலகைக் காத்துப் பராமரித்து, போஷித்து அன்பு செய்யும் பரம தந்தை, விவிலியத்தில் எந்த இடத்திலும் அவரது இயல்பு பற்றி விளக்கப் படவில்லை, பதிலாக அவரது இருப்பு பற்றியும் இயக்கம் பற்றியுமே, நிறைவாக வருணிக்கப் பட்டுள்ளது. இறைவன் இருக்கின்ருர் ஏனெனில் என்றும் செயல்படுகிருர் என்பதே விவிலியம் கூறும் துணிபு.

யூத மக்கள் இறைவனை அவரது செயல்பாடுகளிலேயே உணர்ந்து கொண்டனர். உலகைப் படைத்த இறைவன் அதனை ஆண்டு வழிநடத்தி வருகிருர் என்றும், தாங்கள் சம்பந்தப் பட்டவை யாவும் தங்களுக் கென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரத்தியேகமாக் அவர் செய்யும் அருட்செயல் என்றும் ஆணித்தரமாக ஏற்றுக்கொண்டனர். மற்றைய மறை இலக்கியங்கள் கூறுவது போன்று மனிதன் இறைவனுக்கு பெயர் சூட்டவில்லை. அவரே தமது பெயரை ஆளுமையை மனிதனுக்கு வெளிப்படுத்துகிறார். "இருப்பின் காரணன் அல்லது இருக்கச் செய்பவர் என்னும் பொருளில் யாவே எனத் தம்மை வெளிப் படுத்துகிறார். அவரது செயற்பாடுகளே அவரது வெளிப்பாடு. அந்த வெளிப்பாட்டிலேயே மனிதன் இறைவனை உணர்கிறான். அனுபவிக்கிறான். நல்ல விளைச்சல் அவரது தயாளம், போரில் வெற்றி அவரது தயவு, பஞ்சமும் நோயும் அவரது கோபம், தோல்வி அவரது தண்டனை என்று இயற்கையிலும், தம் வாழ்விலும் நடைபெறும் அத்தனை நிகழ்வுகளிலும் இறைவனது பிரசன்னத்தையும் ஆளுகையையும் யூதர்கள் உணர்ந்து கொண்டனர்.

விவிலியத்தின் இறைவன் அணுகமுடியாத, அணுக்க முடியாத கருப் பொருளல்ல, அவர் தாம் படைத்த மனிதனோடு அன்றாடம் தொடர்பு கொள்ளும் தலைவன். திருமறைநூலில் ஆதியிலிருந்து அந்தம் வரை இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் நிகழும் தொடர்புகளினதும், உறவாடல்களினதும், சந்திப்புக்களினதும் விபரங்களே நிறைந்து கிடக்கின்றன. எனவேதான் விவிலியத் திருமறை நூல் இறைவனும் மனிதனும் எதிர்கொள்ளும்-சந்திக்கும் காவியம் என வர்ணிக்கப்படுகின்றது.

இறைவன் ஒருவரே என்னும் கொள்கை விவிலியத்தின் இன்னுமொரு சிறப்பியல்பு. பல தெய்வக் கொள்கையை யூதர்களோ அன்றேல் கிறிஸ்தவர்களோ என்றைக்கும் ஏற்றுக்கொண்டதில்லை. இறைவன் ஒரேயொருவரே. அவர் மட்டுமே மனிதனின் முழு ஆசாரத்துக்கும், ஆராதனைக்கும், பிரமாணிக்கத்துக்கும் உரித்துடையவர் என்னும் ஆணித்தரமான விசுவாசம் விவிலியத்தின் அத்தனை ஆகமங்களிலும் வலியுறுத்தப் பட்டுள்ளது. இறைவனைக் கைவிடல் அல்லது பிற தெய்வங்களை வணங்குதல் சோரம் போதலுக்குச் சமமானது என்று வன்மையாகக் கண்டிக்கும் அளவுக்கு ஒரு தெய்வக்கொள்கை யூதர்களிடையே ஸ்தாபிக்கப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. மன ஒத்த காதற் தம்பதிகள் எவ்வாறு தம்பரஸ்பர அன்பை அன்னியருக்கு விட்டுக்கொடுக்காது பொறுமையுடன் அதைப் பேணிப்பாதுகாப்பாரோ அது போல இறைவன் என்றைக்குமே


கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர்

# புனித யூதாததேயு

தேற்றுத்தீவு

## சித்திரைத் திருநாள்

**19 - 4 - 87 — 26 - 4 - 87**

தினமும் மாலை 4.30 மணிக்கு, திருவழிபாடும் திருப்பலி பூசையும் நடைபெறும்.
25ஆம் திகதி திவ்விய நற்கருணை ஆராதனையும், திருப்பலியும்,
26ஆம் திகதி காலை 7:30 மணிக்கு திருநாள் கூட்டுத்திருப்பலி.
பக்தர்கள் எல்லோரும் புனிதரின் அருள் பெற்று வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

04-4-87, பரிபாலகர்,
தேற்றுத்தீவு, களுவாஞ்சிக்குடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் ஜனத்தைக் கைவிடாது, என்றைக்கும் அதனைப் பிரமாணிக்கத்துடன் மாறுத அன்பு செய்கின்றுர் என்றும், அவர்களை எந்த அன்னிய தேவர்களுக்கும் விட்டுக்கொடுக்க விரும்பாத பொறுமையுள்ள நாயகன் என்றும் அழகாகவும் ஆழமாகவும் விபரிக்கின்றது.

இத்தகைய சிறப்பம்சங்கள் யாவும் ஒருங்கு சேர்ந்த அன்பின், பாசத்தின் இலக்கணமாக, இறைவன் புதிய ஏற்பாட்டில் இறைமகன் யேசுவினுல் தந்தை என அறிமுகப்படுத்தப்படுகின்றுர். அன்ருட வாழ்வின் உதாரணங்களுடன், இறைவனுக்கும் மனிதனுக்கும் - தந்தைக்கும் தனையனுக்குமுள்ள உறவுகளையும், உரிமைகளையும் வெளிப்படுத்துகிருர். பயந்து நடுங்கி. கைகட்டி வாய்பொத்தி கூனிக்குறுகி எட்டி நிற்காமல், ஒடோடிச் சென்று இறுக அணைத்து அன்போடும் உரிமையோடும் ' அப்பா தந்தையே'', என்று விழிக்கப்பட வேண்டியவர் நம் வானகத் தந்தை இறைவன் என்று இறைமகன் யேசு நமக்கு வெளிப்படுத்துகிருர். உலகத்தை நிறைவாகவே அன்பு செய்யும் இறைவன் அறிவின் பொருள் மட்டுமல்ல - நமது முழுமையான அன்பின் பொருளும் கூடத் தான். இறைவனை உண்மையாக அன்பு செய்வோர் ஆண்டவரே, ஆண்டவரே என்று வாயினுல் மட்டும் நாமஜெபம் செய்வோர் அல்ல, மாறுக அன்ருட வாழ்வில் அவரது பிரசன்னத்தை உணர்ந்து அவரை அன்பு செய்து, அவரது அன்புக் கட்டளைகளின்படி வாழ்வோரே அவரின் உண்மையான பக்தர்கள், அன்பர்கள் பிள்ளைகள் என்பதை இறைமகன் யேசு தன் போதனைகளாலும் சாதனைகளாலும் வாழ்ந்து காட்டியுள்ளார்.

விவிலியம் கூறும் இறைவன், இறைமகன் யேசு கூறும் இறைவன், வணங்கப்பட வேண்டிய இறைவன் மட்டுமல்ல அன்புடன் அடிபற்றப்பட வேண்டிய இறைவன், வாழ்த்தப்பட வேண்டிய இறைவன் மட்டுமல்ல வாழ்க்கையின் மையமாக இருக்க வேண்டிய இறைவன்.

**விவிலியம் கூறும் இறைவன் நம் வானகத் தந்தை இறைமகன் யேசுவின் இலக்கணப்படி வாழும் நமக்கு வாழ்வையும் அன்பையும் பூரணமாகவே வழங்கும், வாழும் இறைவன்.**


# மாபெரும்
# போட்டி நிகழ்ச்சி

## வெல்லுங்கள் ரூபா 1,500

புனித அந்தோனியார் இளைஞர் முன்னணி, கத்தோலிக்க சமூக சேவை நிலையத்தின் 25வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் கட்டுரை, கவிதை சிறுகதை போட்டி நிகழ்ச்சி.

தலைப்பு: கட்டுரை:
''சத்தியம் (உண்மை) உன்னை விடுதலையாக்கும்''
கவிதை:
''நீயே இறைவனின் ஆலயம்''
சிறுகதை:
''மனமே சோர்ந்து விடாதே''

குறிப்பு:
1. கட்டுரை 300 — 350 சொற்களில்
2. கவிதை வரையறையில்லை.
3. சிறுகதை 200 — 250 சொற்களில்
4. உங்கள் ஆக்கங்கள் கிறிஸ்தவ, சமூக, கலாச்சார கண்ணேட்டத்தில் அமையலாம்.

பரிசு:
முதலாம் பரிசு : ரூபா 250/-
இரண்டாம் பரிசு : ரூபா 150/-
மூன்றும் பரிசு : ரூபா 100/-

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரியுடன், ஆக்கங்கள் உங்கள் சொந்த ஆக்கம் என்பதைக் காட்ட பாடசாலை அதிபர், தொண்டர் ஸ்தாபனங்களின் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் அல்லது பங்குக் குருவின் அத்தாட்சியுடன் 1-5-1987 ஆம் திகதிக்கு முன் அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர் (இறைபணி குழு)
புனித அந்தோனியார்
இளைஞர் முன்னணி,
கத்தோலிக்க சமூகசேவை
நிலையம்,
61, 63, விவேகானந்த மேடு,
கொழும்பு - 13.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைஞர் அரங்கம்

# விமர்சித்தல் - INTERPRETATION

- ஒவ்வொரு நிகழ்வும்
- ஒவ்வொரு விடயமும்
- ஒவ்வொரு நாளும்
- ஒவ்வொரு நாடும்

விமர்சனத்திற்குரியனவே ! ஆண்டாண்டு தோறும். கொண்டாடப்படும் நிகழ்வுகளும் ஆண்டுக்காண்டு புதிய சிந்தனைகளையும் — நவமான கருத்துக்களையும் கொடுக்கவேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இது கிறிஸ்துவின் பாடுகளை — உயிர்ப்பு விழாவை நினைவூட்டும் காலம். இதிலிருந்து இன்னும் அனுபவிக்க வேண்டிய உணர்வுகளும் — உணர்ச்சிகளும், விளக்கிக்கொள்ள வேண்டியதுமான உண்மைகளும் ஏராளம் உண்டு.

அதேவேளை நாம் தொடர்ந்து செய்யும் பணிகளைப்பற்றி விமர்சிப்பது — அதையிட்டு ஈடுபாடு கொண்டவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்வதும் முக்கியமானதொன்ருகும்.

இப்பொழுது நேரடியான சந்திப்புக்களையும் — ஒன்று கூடல்களையும் மேற்கொள்வது முடியாததாகிவிட்டது

எனவே, நாம் எழுத்துக்கள் மூலமே கருத்துப் பரிமாறல்களை — எண்ணங்களை எடுத்துரைக்க வேண்டியவர்களாக இருக்கின்ருேம்.

மட்டுப்படுத்தப்பட்ட, எழுத்துரிமைகளுக்கமைவாக இக்கால நடப்புக்களை — உண்மைகளை எடுத்துரைக்க அதன் வழி விழிப்பை — எழுச்சியை ஏற்படுத்த வாய்ப்புபெற்ற (அழைக்கப்பட்ட) நாம் வெறுமனே,

- கற்பனை
- வர்ணனை
- சல்லாப

கதைகளை, பொழுதுபோக்கு விடயங்களை மாத்திரம் கூறிவிட்டு அகலமுடியாது.

எனவேதான், தொண்டனுடன் ஈடுபாடு கொண்டவர்கள் — கனதியான வாசகங்கள் நுண்மையான விடயதானங்களை விளங்கிக்கொள்வதுடன் மட்டும் நின்றுவிடாமல் (உறங்கிவிடாமல்) மற்றவர்களுக்கும் அவற்றையிட்டு விமர்சிக்க — (உங்கள் பக்கத்தில் எழுத) வேண்டும் என அன்புக்குரல் கொடுப்பது —

**கலையுலகன்.**

'' வரிகளுக்கூடாக வாசியுங்கள் ''

**"Read Between the lines"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வே வேதனை தான்...

ஐயிரண்டு திங்களாய்,
அன்னை மடி சுமக்க
அவனியில் பிறக்கும் போது
அவளுக்கது வேதனை...!

துள்ளித் திரியும் பருவத்தில்
துடுக்குகளை அடக்கும்போது
எண்ணம் ஈடேரு ஏக்கத்தில்
நெட்டுருளும் மனத்துயர்கள்...

இனிய பள்ளிப் பருவத்தில்
இளமை தரும் போதையில்
கல்வியைக் கோட்டை விட்டு
கலங்கும்போது சோதனை தான்...!

வேலைகளுக்காய் விண்ணப்பித்து
படிப்பல ஏறியிறங்கி
ஏமாற்றத்தால் வெதும்பும்போது
தானே தனக்குச் சுமை...,

வாலிபம் தந்த கோளாறால்
காதல் பிடிக்குள் சிக்கி
தோல்வியில் துவழும் போது
சுமை அந்த இதயத்துக்கு...!

சம்சாரம் என்ற பதத்தில்,
பாசங்களுக்கு அடிமையாகி
கடமைகளில் மூழ்கும்போது
உயிரே பெரும் சுமை...!

சமூகம் என்ற சாக்கடையில்
சந்தர்ப்ப வாத புழுக்களாய்
வாழ நேரும் சந்தர்ப்பங்களில்
வாழ்வே வேதனை தான்...!

பிறந்த நாள் தொட்டு
நால்வர் சுமக்கும் நேரம்வரை
நாயாய் அல்லல் படும் இந்த
மானிடப்பிறவியே வேதனை தான்..!

# பரிதாபம்

புதுமைகள் தேவையென்று
புயலைப் போல் பொங்கியெழும்
புது யுகத்தின் மானிடர்க்கு
புதுமை பழமை என்று
பகுத்துணர முடியாத
பரிதாபம் என்னே ஐயோ!

மேடையில் உயர் வீராவேஷம்
கீழிறங்கிப் பாவம் கோபாவேஷம்
வாயினல் பகரும் கருத்து
வாழ்வினைப் பொருத்த மட்டில்
புரியாத விந்தை யாகும்
பரிதாபம் என்னே ஐயோ!

உண்மை நேர்மை சத்தியத்தை
ஊருக் குபதேசம் செய்து
உண்மையை ஒளித்து மறைத்து
நேர்மையை எட்டி உதைத்து
சத்தியத்தை சந்திக்கிழுக்கும்
பரிதாபம் என்னே ஐயோ!

ஒற்றுமை உயிர்நாடி என்று
உரத்த குரல் எழுப்புகின்றார்
ஒரு ‘டிராம்’ அடித்தார் என்றால்
உன்னத பண்புகளை மறந்து
உயர் குரலில் சண்டை போடும்
பரிதாபம் என்னே ஐயோ!

தனக்கெது தேவை என்று
தானே இன்னும் அறிந்திராமல்
தரணியின் ஈனப்பிறவியாய்
தடம் புரண்டு வாழுகின்ற
தன்னலம் படைத்தோர் வாழ்வின்
பரிதாபம் என்னே ஐயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம் - ஒரு கோப்பை சாம்பார்

மனித உயிர்களுக்கு மதிப்பு மலிவாய்ப் போய்விட்டதொரு நிலையில் சதா யுத்த பீதியுடன் எந்நேரமும் உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு வாழவேண்டிய ஒரு இக்கட்டான, பரிதாபகரமான நிலைக்கு ஒரு ஜனநாயக நாட்டின் மக்களில் ஒரு சாரார் தள்ளப்பட்டுவிட்டது உண்மையிலேயே ஒவ்வொரு ஜனநாயகவாதியும் வெட்கித் தலைகுனிய வேண்டியதொரு விடயமாகும்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்கள் இன்று யுத்தமுனைப் பலிக்கடாக்களாக்கப் பட்டுள்ளமை வருந்தத்தக்கது. இப்பலிக்கடா வாழ்க்கைக்கு மக்கள் பழக்கப்பட்டு விட்டனர் என்றே கூறவேண்டும். அநியாயச் சாவு என்பது இப்போதெல்லாம் தினசரி நடக்கும் விடயமாகி விட்டது. எம் மக்களின் மத்தியில் விரக்தியும் - வேதனையுமே எஞ்சி நிற்கின்றன.

ஒரு குறித்த இன மக்களின் உரிமைகளையும் நன்மைகளையும் பாதுகாப்பதற்காக வேண்டி, இன்னொரு இனமக்களின் சுதந்திரத்தை வரையறுப்பதோ, குறைப்பதோ அல்லது பறிப்பதோ ஜனநாயக ரீதியானதோர் நடவடிக்கையல்ல. ஜனநாயக பாரம்பரியங்களுக்கு மதிப்பளிப்போர், மற்றவர்களின் உரிமைகளையும் - மனிதத்துவத்தையும் மதிக்க வேண்டும். பல சிறுபான்மையினங்கள் வாழும் ஜனநாயக நாடுகளிலே- பெரும்பான்மை இனம் அரசியல் அதிகாரத்திலிருப்பது இயல்பானதொரு நிகழ்வு, ஆனால் அதே பெரும்பான்மையை பயன்படுத்தி, பெரும்பான்மை இனத்தின் உரிமைகளை மிகைப்படுத்துவது - விஸ்தரிப்பது விரும்பத்தக்கதல்ல.

> மற்றவர்கள் மனதிற்குள்
> நீ புக நினைத்தால் முதலில்
> அவர்களது பிரச்சினைக்குள் புக
> நீ கற்றுக்கொள்.

சிறுபான்மை என்பதால் - அச்சிறுபான்மை இனம் மனதத்துவத்தில் எள்ளளவும் குறைந்ததெனக்கருதுதல் தவறு. அவர்களும் சகல உரிமைகளும் கொண்ட பிரஜைகள் என்பதனை பெரும்பாலான ஜனநாயக நாடுகளின் பெரும்பான்மை இனங்கள் ஏற்றுக்கொள்வதற்கு சிவப்புக் கொடி காட்டுகின்றனர். அவ்வாறான உரிமை நியாயமாகத் தோன்றினாலும் கூட அவற்றை அங்கீகரிக்க அவற்றுக்கு ஏனோ கஞ்சத்தனம் பல கிலோ கிராம்களில் திணிக்கப்பட்டுள்ளன.

ஒரு அரசாங்கமென்றவகையில் அனைத்து மக்களையும் காக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு கட்டாயம் உண்டு. அதில் சிறுபான்மை பெரும்பான்மை என்று பேதம் இல்லை.

மனித உயிர்கள் மதிக்கப்படவேண்டியது, காப்பாற்றப்படவேண்டியது. அதேநேரம் அது எந்த இனம் எந்த மொழி என்ற வேற்றுமைகளைக் கடந்த ஒரு செயற்பாடு என்பதனை ஆட்சியாளர்கள், மனதில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறிருப்பினும் ஒரு ஜனநாயக நாட்டில்,இனங்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகள் தொடருமானால், சிறுபான்மை இனங்களின் எதிர் காலம் மட்டுமன்றி பெரும்பான்மை இனத்தின் எதிர்காலமும் கூட சாம்பார் போன்றதாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஆண்டில் மலையளவுக்கு உயர்ந்து விட்ட பாதுகாப்புச் செலவினம் இலங்கையின் எதிர்காலத்திற்கு ஒரு சிவப்பு விளக்காகவே உள்ளது என்பது தெளிவு.

— மாகோ ஈஸ்வர புத்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி முரசு

## ✶ 2வது ஆண்டு நிறைவு விழா

மட்டக்களப்பு 3ஆம் வட்டாரத்திலுள்ள இளைஞர் முன்னேற்றக் கழகம், தனது 2வது ஆண்டு நிறைவு விழாவை 24-2-87 அன்று கழக போஷகர் அருள்திரு. நோயல் இம்மானுவேல் தலைமையில் கொண்டாடியது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அருட்தந்தை சந்திரா பெர்னண்டோ அடிகளார் உரையாற்றுகையில், மட்டக்களப்பிற்கு சிறந்த தலைவர்கள் பலர் வேண்டும். இக்கழகத்தில் இருந்து நல்ல பல தலைவர்கள் உருவாவதே இக்கழகத்தின் வெற்றியாகும் எனக் கூறினர். விழாவில் திரு. அந்தோனிமுத்து அவர்கள் சிறப்புரையாற்றினர். அருள்திரு. ஜோசப் அடிகளாரும் கலந்துகொண்டு சிறப்பித்தார். இறுதியில் கழக 87/88 ஆம் ஆண்டுக்குரிய புதிய நிருவாகக் குழு அறிமுகப்படுத்தப்பட்டது.

## ✶ திருவழிபாட்டுப் பாடல் புத்தகம்

திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட அளவில் வழிபாடுகளில் பாவிப்பதற்கென வழக்கத்தில் உள்ள பாடல்களை திரட்டி நூல் வடிவாக்கும் முயற்சி ஒன்றுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

வழிபாடுகளில் பாடும்போது அனைத்து மக்களும் பங்குகொள்ளும் வகையில் எல்லா ஆலயங்களிலும் இவ்வாறான ஒரு பொதுப் பாடற் புத்தகம் பாவிக்கப்படுவது நல்லது என்று கருதப்படுகிறது.

## ✶ வானொலி நிகழ்ச்சி பற்றிய திறனாய்வு

இலங்கை வானொலியில் 'புதிய உலகம்' 'சிறுவர் உலகம்' என்னும் பெயர்களில் கத்தோலிக்க (தமிழ்) நிகழ்ச்சிகள் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஒலிபரப்பாகி வருகின்றன. இதன் வடிவம், வளர்ச்சி, பயன்பாடு, தாக்கம் பற்றிய மதிப்பீடு ஒன்றினை நடாத்தும் முயற்சியில் திரு./மட் மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் ஈடுபட்டுள்ளது. இதற்கு உதவியாக நேயர்களிடமிருந்து விபரங்களைப் பெறும் பொருட்டு வினாக்கொத்து ஒன்று தயாரித்து அனுப்பப்படுகின்றது. கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புவோர் நிலையத்தோடு தொடர்பு கொண்டு வினாக்கொத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

## ✶ வெள்ளித்திரையில் புனித அல்போன்சா

சகோதரி அல்போன்சா பற்றிய திரைப் படம் வெளியிடப்பட்டுள்ளது. கேரளத்தைச் சேர்ந்த சகோதரி அல்போன்சாவின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக ஜனவரி மாதம் 11ம் திகதியன்று திரையிடப்பட்டது.

## ✶ குழுவாழ்வுச் சகோதரி மரணம்

குழுவாழ்வுச் சகோதரி அல்போன்சா 11-3-87 அன்று காலமானார். மலைநாட்டைச் சேர்ந்த இவர் எமது மறைமாவட்டத்தில் குழுவாழ்வு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோது தெரிவுசெய்யப்பட்ட ஐவரில் ஒருவர் கடந்த நான்கு ஆண்டுகளாக வாகரை, ஆயித்தியமலை, அளிகம்பை, கொக்கட்டிச்சோலை, நாவற்குடா போன்ற இடங்களில் பணியாற்றியுள்ளார். இளைப்பு நோயினால் துன்புற்ற இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

## ✶ திருமண ஆயத்த வகுப்பு

திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண ஆணைக்குழு மார்ச் மாதம் 1ம் திகதி அன்று வீச்சுக்கல்முனை புனித அன்னம்மாள் ஆலயப் பங்கில் திருமண ஆயத்த வகுப்பு ஒன்றை நடாத்தியது. அருட்திரு. பயஸ் பத்மராஜா அடிகளும் அவரது குழுவினரும் இதனை நடாத்தினர். காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை திருமணம் பற்றிய பல தலைப்புகளில் உரைகள் நிகழ்த்தப்பட்டன. இதில் மொத்தம் 35 இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர். இவ்வகுப்பு மிகவும் பயனளிக்கக்கூடியதாக அமைந்தது என்பது பங்குபற்றியோர்களின் நிறைவான பதிலில் தெரிந்தது.

## ✶ ஆசிரியர் கலாசாலையில் திருச்சிலுவைப்பாதை

22-3-87 அன்று மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் திருச்சிலுவைப்பாதை நடைபெற்றது.

25-3-87 அன்று மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியின் பயிற்சி ஆசிரியர்களுக்காக தியானமும் கருத்தரங்கும், புளியந்தீவு குழுவாழ்வு சகோதரிகளின் தியான இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை வரலாற்றில் முதன்முறையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கு அதிபர் திரு. K. கனகசூரியம் அவர்கள் பூரண ஒத்துழைப்பு நல்கினார். இவற்றுக்கான ஏற்பாடுகளை மறைக்கல்வி நடுநிலையம், சங். சகோதரி கிறிஸ்டபல், போதகர் தங்கத்துரை ஆகியோரின் அனுசரணையுடன் கலாசாலையின் கிறிஸ்தவ மாணவர் மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

## ✶ திருமலையில் புனித சூசையப்பர் திருநாள்

குடும்பத்தின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் பெருநாளை புனித சூசையப்பர் கல்லூரி, புனித சூசையப்பர் கன்னியர் மடம், புனித சூசையப்பர் தொழில் நுட்பக் கல்லூரி, புனித சூசையப்பர் வயோதிபர் மடம் ஆகியனவும் பங்குனி மாதம் 19ம் திகதி மிகவும் விமரிசையாக கொண்டாடின.

இப்பெருநாளை கொண்டாடுமுகமாக புனித மரியாள் பேராலயத்தில் கூட்டுத் திருப்பலி ஒன்றை திரு./மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், அருட்தந்தை பீற்றர் குருகுல ஆராச்சி, அருட்தந்தை றேமன் அரசரெட்னம் அடிகளாரும் மற்றும் திருமலை மறைக்கோட்ட குருக்கள் சகலரும் நிறைவேற்றினர். அவர்களுடன் அருட்சகோதரர்களும், பங்கு மக்களும் கலந்துகொண்டனர்.

கூட்டுத் திருப்பலியை அடுத்து, பேராலய மேய்ப்புப்பணிச் சபை மற்றும் சபைகளும் இணைந்து ஆயர் அவர்களின் குருத்துவ வாழ்வின் 25ஆவது நிறைவையும் அவரது பெயர் கொண்ட திருநாளையும் ஆடம்பரமற்ற வரவேற்புபசாரம் மூலம் சிறப்பித்தனர். இவ்விழாவின் இறுதியில் ஆயர் அவர்கள் திருகோணமலை புனித மரியாள் பேராலய பங்கு மக்களுக்கு தனது நன்றியையும் ஆசியையும் வழங்கினார்.

## ✶ பாலர் தினம்

பாலர் தினத்தை கொண்டாடுமுகமாக திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் பங்குனி மாதம் 1ம் திகதி காலை 8 மணியளவில் பாலகரின் கூட்டமும் நடைபெற்று, தொடர்ந்து 8.30 மணியளவில் திருப்பலியும் நடைபெற்றது.

இத்திருப்பலியை சமூகசேவை இயக்குனர் அருட்தந்தை அன்ரனி லியோ அடிகளார் நிறைவேற்றினார். இதற்கு ஏறக்குறைய 500 பாலகர்கள் கலந்துகொண்டனர். இவர்களுடன் மறையாசிரியர்களும் சேர்ந்து திருப்பலியை சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து பாலகர்களை மகிழ்வித்து, ஊக்குவிக்குமுகமாக சிறு தேநீர் விருந்தளித்து வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

> மனிதன் ஒரு மத்தாப்பூ. அவன் இறைவன் என்னும் நெருப்போடு சேரும் போதுதான் சுடர் விடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி இழந்த வாழ்வை உய்விக்க உயிர்த்தெழுந்தார்

போதகர் கே. யேசுராசா

உலக வரலாற்றிலே,

மனிதன் மண்ணில் பிறக்கிறுன்
பிறந்தவன் வாழத் துடிக்கிறுன்
வாழ்பவன் சாக மறுக்கிறுன்
செத்தபின் வாழ்வு முடிகிறது
முடிந்ததும் வரலாற்ரேடு பிணேகிறது
செத்தவன் திரும்ப உயிர்ப்பதில்லே
மனித வாழ்வு பழங்கதையாய் மறைகிறது.

மீட்பின் வரலாற்றிலே,

கடவுள் மண்ணிலே பிறக்கிருர்
பிறந்தவர் வாழ மறுக்கிருர்
மறுத்தவர் சாகத் துடிக்கிருர்
செத்தவர் திரும்ப உயிர்க்கிருர்
உயிர்த்தபின் வாழ்வு தொடங்குகிறது
அதிலிருந்து வரலாறு வளர்கிறது
இறைவாழ்வு - புதுவாழ்வாய் இணேகிறது.

உலக அரசிலே,

அரசன் அரண்மனேயில் இருக்க படையினர்
போர்க்களம் ஏகுகின்றனர்.
அரசன் ஆபத்தின்றி இருக்க, அப்பாவி
கள் கொல்லப்படுகின்றனர்.
மக்கள் மாய்ந்தொழிந்தாலும், மன்னன்
உயிர் வாழ்கின்றுன்.
மாற்றுன் மறைந்தொழிந்தால் மன்னன்
மனம் மகிழ்கின்றுன். வெற்றிவாகை சூடு
கின்றுன்.
தோற்றவர் வெல்வதில்லே, வென்றவர்
தோற்பதில்லே.

கடவுளின் அரசிலே,

வீரர்கள் வீட்டில் இருக்க அரசர்
அமர்க்களம் ஏகினுர்.
குடிகள் பாதுகாப்புடன் இருக்க வேந்தர்
செருக்களம் சென்ருர்.
மன்னர் உயிர் இழந்தார். மக்கள் உயிர்
வாழ்ந்தார்கள்.

மாற்றுன் வென்றதுபோல் தோன்றிற்று ஆயி னும் தோற்றவர் வாகைசூட வென்றவன் (அலகை) மண்ணேக் கௌவினுன். வென்றது கிறிஸ்து தோற்றது சாத்தான்.

''கடவுளின் வலுவின்மை மனிதரின் வலி மையைவிட மேலானது'' (1 கொரி: 1/25)

இப்பேருண்மையை உலகறிய உணர்த்து வதே பாஸ்கு விழா. உயிர்ப்பு விழா.

உயிர்ப்பு விழா,

விண்ணும் மண்ணும் இரண்டறக் கலக் கும் இன்பப் பொன்னுள். தெய்வமும் மனித னும் ஒன்ருகச் சேரும் மகத்துவ விழா. கிறிஸ் துவும், திருச்சபையும் மண ஒப்பந்த மாங்கல் யம் செய்யும் திருமண நன்னுள். விழாக்களின் விழாவும், சிறந்த மங்கல நாளின் சிகரமும் பாஸ்கு விழா என்ருல் மிகையாகாது. காரி ருள் என்னும் பார்மடந்தையின் போர்வை யைக் கிழித்து உதய ஞாயிறு உதயமாகுகின் றது. கிறிஸ்து வெற்றி வீரராக உயிர்த்தெழு கின்ருர்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு இன்று எண்ணில்லா இதயங்களுக்கு இன்பக் குளிர் நிலவாக வேண் டும். பொம்மைகளின் தலேயாட்டலால் நிர பராதி குற்றவாளியாக்கப்படுகின்றுன். ஆட்சி யாளர்களின் அதிகார வெறியால் அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொலே செய்யப்படு கிருர்கள் கூலிப்படைகளின் அடாவடித்தனத் தால் கன்னிப் பெண்களின் கற்பு சூறையா டப்படுகின்றது. காலாகாலமாகக் கட்டிக் காத்துவந்த பொருளாதாரம் கின்னுபின்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்கப்படுகிறது. தீயிட்டுக் கொழுத்தப்படுகிறது. ஒரு புறம் வீடமைப்பு - மறுபுறம் விடுடைப்பு. ஒரு புறம் எழுச்சிக் கிராமம் - மறுபுறம் சோபை இழந்த கிராமம். ஏண்டா இந்த வாழ்க்கை என்று அங்கலாய்க்கும் இதயங்களுக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு ஏக்கம் தீர்க்கும் மருந்தாகட்டும்.

அன்று அடிமை விலங்கு ஒடிக்கப்பட்டு பார்வோனின் அநீத ஆட்சியிலே இருந்து விடுதலை அடைந்து எகிப்தை விட்டு புறப்படுமுன் எபிரேய மக்கள் மகிழ்ச்சியுடன் பாஸ்காவைக் கொண்டாடினர். ''சுதந்திர விழாவாகிய பாஸ்கு விழாவைக் கொண்டாடுவோம்'' என்று தான் அவ்விழாச் சடங்கை ஆரம்பித்தனர். விழா விருந்தின்போது குடும்பத் தலைவன்; இறைவன் தன் மக்களை விடுவித்த கருணையை விளக்கித் தாம் அடைந்த சுதந்திரத்தில் மகிழ்ச்சி கொள்ள விருந்தினரையும் ஊக்குவித்தான்.

இறைமகன் யேசுவும் தம் வாழ்நாளில் இம்மகத்தான விழாவில் கலந்துகொண்டு நித்தியராம் இறைவனைப் போற்றினார். எபிரேய மக்களும், அவர் பின்வந்த யூதரும் மெசியாவை எதிர்நோக்கினர். ஆனால் மெசியாவாகிய மீட்பர் இயேசு வந்து தம் பாஸ்காவை ஏற்படுத்திச் சென்ற இக்காலகட்டத்தில் வாழும் நாம் இயேசு மரணத்தை வென்ற அதே பாஸ்கு தினத்திலே நமது பாவத்தின் அடிமைத்தன விடுதலை நாளையும், இறைமகன் இயேசுவின் விண்ணரசில் நுழையும் இன்பநாளையும் கொண்டாடுகிறோம்.



இயேசுவின் உயிர்ப்பு மனித சரிதையில் ஒரு புத்துலகின் ஆரம்பம். அவரில் நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு அவர் இறைவனின் சமாதானத்தையும் இரக்கத்தையும் பெற்றுத்தருவார்.

## வானொலி நேயர்களின் கவனத்துக்கு

இலங்கை வானொலியில் 'புதிய உலகம்', 'சிறுவர் உலகம்' என்னும் பெயர்களில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவதை நேயர் அறிவார்கள்.

இந்நிகழ்ச்சிகளை மேலும் வளப்படுத்தும் நோக்கில் இவை பற்றிய ஆய்வொன்றினை ஆரம்பித்துள்ளோம்.

இதற்கு உதவியாக 'கேள்விக் கொத்து' ஒன்றினைத் தயாரித்து நேயர்களுக்கு அனுப்பி வருகின்றோம். அதில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளித்து இரண்டு வாரங்களுக்குள் எமக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விக்கொத்து இதுவரை கிடைக்காத நேயர்கள் எம்மோடு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பொறுப்பாளர்,
கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள்,
சமூகத்தொடர்பு நிலையம்,
ஆயரகம், மட்டக்களப்பு.

அன்று எகிப்தை விட்டுப் புறப்படும்முன் தின இரவு மக்கள் தங்கள் இல்லத்தில் குடும்ப சகிதம் ஒன்றித்து, விழித்து பாஸ்கு செம்மறியை நின்று உண்டு தங்கள் நீண்ட பயணத்திற்கு ஆயத்தம் செய்தனர்.

இன்று வாழ்விலே ஒளியிழந்து வாழ்வில் உய்வே இல்லையா என்று ஏங்கும் நமக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு சுதந்திர ஒளி வீசப் போகின்றது. அந்த ஒளி நமது சுதந்திர வாழ்வுக்கு அடித்தளமாகட்டும்.

''நீங்களோ இருளாய் இருந்தீர்கள் ஆனால் இன்று ஆண்டவரின் ஒளியாய் இருக்கிறீர்கள்'' (எபே: 5/8) என்ற உறுதியின் வார்த்தை எம் உள்ளங்களுக்கு உரமூட்டட்டும். மீட்பர் யேசுவின் உயிர்ப்பின் ஒளியிலே மனிதமாசுகள் மறையட்டும். தவறிழைத்தோர் நன்னெறியையும், துக்கமுடையோர் மகிழ்ச்சியையும் மீண்டும் அடைவார்களாக. ஒளி இழந்த எம் வாழ்விற்கு உயிர்த்த இயேசு புதுவெள்ளியாகத் தோன்றுகிறார். இப்புதிய வெள்ளியின் சுடரிலே நாமும் புதுவாழ்வு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவி ஆரம்

# சித்திரையே! ஏது செய்வாய்?

பூத்துவரும் சித்திரையே ! எமது வாழ்வில் !
புலர் வேதும் கொண்டு வரும் நோக்க முண்டா?
காத்திருந்து ! காத்திருந்து விடிவு தன்னைக்
காணுது கடுமிருளில் வாடுகின்ருேம்
நேத்திரத்தைப் பறிகொடுத்தோன் நிலேயில் நாமும்
நிகரில்லாச் சுதந்திரத்தை இழந்து நாளும்
நீச்சலிடுகின்ருேமே ! குருதி நீரில் !
நீ யெம்மை மீட்கவெது கொண்டு வாராய்?

வீடிழந்து பொருளிழந்து வீதி நின்று !
வேதனேயில் வேகின்ருேம் ! விதியே யென்று
கூடிழந்த குயிலாளுேம் ! கொடிய காக்கை
கொத்தியெமை விரட்டிடவே ! சிதறியோடி
நாடிழந்து உலகத்து தெருக்கள் மீது
நாதியற்று அலேகின்ருேம் ! அகதியாகி !
ஓடிழந்த ஆமையினம் உயிர் வாழாது
உலகத்தில் ! நாடிழந்தோம் ! நாமுமஃதே !

மங்கையர்கள் கற்பிழந்தார் ! மணவறைக்குள்
மணமக்கள் ''ஷெல்'' விழுந்து பிணமாகின்ருர் !
பொங்கலுக்கு கதிரறுக்கப் போன மக்கள் !
பொசுங்குகிருர் வயற்காட்டில் ! புழுக்களாக !
எங்கெங்கும் வெடியோசை ! குத்து வெட்டு
இரைந்துவரும் கண்ணீரோ டிரத்த ஆறு !
வெங்கொடுமைச் சாக்காட்டு நிலேயை மாற்றி
விடிவளிக்கச் சித்திரையே ! ஏது செய்வாய்?

நிலாதமிழின்தாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னவர் உயிர்த்தது கேளீர்

அதர்மம் தோற்றது பாரில்
அருந்தர்மம் வென்றது பாரீர்
மரணம் அகன்றது பூவில்
மன்னவர் உயிர்த்தது கேளீர்

அநீதி அழிந்தது பாரில்
அருந்நீதி உயர்ந்தது பாரீர்
இருளோடி ஒழிந்தது பூவில்
இயேசுபரன் எழுந்தது கேளீர்

பொய்மை உறைந்தது பாரில்
வாய்மை நிறைந்தது பாரீர்
கல்மனம் தோற்றது பூவில்
கல்லறை திறந்தது கேளீர்

கயமை பறந்தது பாரில்
கனிவே சிறந்தது பாரீர்
உயிர்ப்பு உள்ளது பூவில்
உண்மை என்பது கேளீர்

இரத்தம் சிந்துது பாரில்
இரக்கம் மறைந்தது பாரீர்
உரிமை கிடைப்பது பூவில்
உறுதி என்பது கேளீர்

— ஆழியோன் —

## அவன் மீட்டும் வீணைகள்

இவ்வுலகம் பொருளில்லார்க் இல்லை ! - அந்த
இறையுலகம் அருளில்லார்க் இல்லை !
ஒவ்வொன்றும் இறையருளின் ஆணை ! நாம்
உயர் ஈசன் மீட்டுகின்ற வீணை !

கைபட்டால் எழுந்துவரும் நாதம் ! - அவன்
கைதீண்டா வேளையிலே மோனம்
மெய்வாயை கண்மூக்கை செவியை ; - இன்னும்
மிகஅழகாய் படைத்திட்டான் புவியை !

பிறப்புண்டு உண்டேதான் இறப்பு ! - இது
புவிமீதில் அவன் செய்த வகுப்பு !
சிறப்புக்கள், சிந்தனைகள் செல்வம் ! - அவன்
சேர்த்துவைத்த வெற்றிகளின் சின்னம் !

தொடர்ந்துவரும் சிலகாலை இன்பம் ! - அவன்
தோற்றிடுவான் சிலவேளை துன்பம் !
கடவுளவன் கருணைக்கு ஒப்பு ! - இந்தக்
காசினியில் ஏதுண்டு, செப்பு?

ஆறேழு பிள்ளைகளும் தருவான் ! - ஒன்றும்
அற்றதனி மலடாக்கி விடுவான் !
பேறுகளும் வெற்றிகளும் தோற்றும் ! - அந்தப்
பெருமானின் ஆணைகளே தோற்றம் !

அ . கௌரிதாசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986 ஐப்பசித் திங்கள் 22ஆம் நாள் புதன்கிழமை மகாநாட்டின் 2ஆம் நாள் நிகழ்ச்சித் தொடருக்கு அனைத்துப் பிரதிநிதிகளும் காலை 9-30க்கு சமூகமாயிருந்தனர்.

எல்லோரினதும் முகங்களிலும் ஓர் எதிர்பார்ப்பும் ஒரு கேள்விக்குறியும் இருந்தது. ஏனெனில் அன்று காலையில் மனிலா அதிமேற்றாணியார் ஜெய்மி சின் அவர்கள் ''பிலிப்பைன்ஸ் அனுபவங்கள் - தொடர்புகள்'' பற்றி கலந்துரையாட இருப்பதாக நிகழ்ச்சி நிரல் சுட்டிக்காட்டியது.

1ம் நாள் நிகழ்ச்சிகள் முடியும் வரை அதிமேற்றாணியார் ரோமிலிருந்து வரவில்லை இருப்பினும் ஆரம்ப உரைத் தொடர் திரு. ஜேக்கப் ரிக்காட். (General Drictor RTL) அவர்களினால் ''கலாச்சாரமும் - சமயமும், பரிமாணம் - தொடர்புகள் பற்றிய உரை வழங்கப்பட்டது. உரை முடிவடைய அனைத்துப்பேரும் எதிர்பார்த்த அதிமேற்றாணியார் ஜெய்மி சின் மகாநாட்டு மண்டபத்திற்குள் நுழைந்தார். முதல் நாள் இரவே அதிமேற்றாணியார் வத்திகானிலிருந்து புதுடெல்கி வந்து சேர்ந்தார். வத்திகானில் தமக்கிருந்த எத்தனையோ நிகழ்ச்சிகளை, குறிப்பாக பாப்பரசருடனான சில சந்திப்புக்களைக் கூட இடைநிறுத்திவிட்டு, இம் மகாநாட்டுத் தொடர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்திருந்தும் - உண்மையில் எவ்வளவு தூரம் அதிமேற்றாணியார் ''வெகுஜனத் தொடர்பாடல் (கருத்துப்பரிமாறல்கள்) மட்டில் அக்கறை கொண்டுள்ளார் என்பதை அவரைப் பற்றிய அறிமுகத்திலிருந்து உணர முடிந்தது.

சற்றுப் பருமனான உடம்பு. மிகவும் சிறிய விழிகள் இல்லாமலும் எவ்வேளையும் ஒரு வித புன்முறுவல், மிகக் கட்டையான தலைமுடி. இவைகளை ஒட்டுமொத்தமாகக் கொண்ட ஆயர்தான் ஜெய்மி சின் அவர்கள்.



கலையுகன் எஸ். லோகநாதன்

ஐரோப்பிய நாடுகளிலிருந்து, குறிப்பாக அமெரிக்க நாட்டவர் அதிமேற்றாணியார் அவர்களிடம் அதிக விளக்கங்களைப் பெறுவதற்கு ஆர்வமாயிருந்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

''பிலிப்பைன்ஸின் இன்றையச் சூழலில் தமது அனுபவங்கள் - தொடர்புகள்'' (The experience of communication in the particular situation of Philippines) பற்றியதான கருத்துக்களை உய்த்துணர்ந்த- அனுபவித்த உண்மைகளை அதிமேற்றாணியார் கூறமுன் அனைத்து மகாநாட்டுப் பிரதிநிதிகளையும் தம்முடன் இணைத்துக் கொள்ள, சில எளிமையான, ஆனால் ஆழமான - கேலிக் கதைகளை-சம்பவங்களை கூறி அனைத்துப் பேரும் குலுங்கி - குலுங்கி சிரித்து, களைத்து - ஆறிக் கொண்டிருந்த போது படிப்படியாக தமது அனுபவங்களை தொடர்புகளைக் கூறினார். குறிப்பாக, மாக்கோஸின் ஆட்சி முறையின் அமைதியின்மைச்

## சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின்
## 14வது மகாநாட்டு அனுபவங்கள் (தொடர்) - 4
## 〈14th Congress of UCIP〉



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் - மக்களின் எழுச்சி பற்றியும், உண்மையான சமூக விழிப்புணர்ச்சி ஏற்பட கத்தோலிக்க திருச்சபை எவ்வளவு தூரம் ஈடுபாடு கொண்டிருந்தது என்பதனையும் விளக்கினர். அதே வேளை தாம் (மனிலாத் திருச்சபை) பல சந்தர்ப்பங்களில், பக்கச் சார்பின்றி நீதியை நிலைநாட்ட எவ்வாறு உழைத்தது எனவும் கூறியபோது, நாம் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் கேட்ட, பார்த்த, படித்த அனைத்தும் அவ்வேளையில் கனதியான ஒரு சூழலை உருவாக்கியது என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். அதிமேற்றிணியார் ஆங்கிலத்தில் தமது உரையை வழங்க, சம காலத்தில் பிரஞ்சிய, ஜேர்மனிய, ஸ்பானிய மொழி பெயர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதிமேற்றிணியாரின் கருத்துரைக்குப் பின் கேள்விகள், மேலதிக விளக்கங்களுக்காக போதிய நேரம் வழங்கப்பட்டிருந்தது. குறிக்கப்பட்ட சில கேள்விகளே நேரடியாகக் கேட்கப்பட்டன. அநேக கேள்விகள் தலைவர் மேசைக்கு (Chirman's table) அனுப்பப்பட்டன.

இருப்பினும் மேற்றிணியார் கூடுமான வரை, வினாக்களைத் தொகுத்து பதில்களை மேலதிக விளக்கங்களை சிக்கலின்றி மிகப் பொறுமையுடன் வழக்கியது உண்மையில் அன்னார் நுண்மையான ஓர் இராஜ தந்திரி (Diplomatic - Person) என எண்ணத் தூண்டியது.

வினாக்கள் பொதுவாக பிலிப்பைன்ஸின் தற்போதைய ஆட்சியை - ஆட்சியாளர்களைப் பற்றியதாயும் சதிப் புரட்சிகளைப் பற்றியதாயும் மார்க்கோசின் மீள் வருகை பிலிப்பைன்ஸில் நிகழாதா? என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்திருந்தன.

கருத்துப்பரிமாறல் முடிவடைய மணிலாவில் வெளியிடப்படும் ''வெரிற்றஸ்'' (Veritas) செய்தித்தாள் கடந்த காலங்களில் சிறப்பாக வெளிவந்தமைக்காகவும் - சமூக விழிப்புணர்ச்சியைத் தட்டியெழுப்பும் சாதனமாக உதவியது என்பதாலும் 'UCIP'யின் தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டது.

அதிமேற்றிணியர் ஜெய்மி சின் அவர்களே தங்கப் பதக்கத்தை, ''வெரிற்றஸ்'' செய்தித்தாள் ஆசிரியர் திரு. பீலிக்ஸ் வூரிஸ்ரா அவர்களுக்கு வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்ச்சிகளுடன் மதிய போசனத்திற்காக மகாநாட்டு நிகழ்ச்சிகள் ஒத்திப் போடப்பட்டன.

மீண்டும் பிற்பகல் நிகழ்ச்சித் தொடர் 3-00 மணிக்கு ஆரம்பமானது.

பிற்பகல் ஆய்வுரைகளில் கிழக்காசிய நாடுகளின் சமயம், பண்பாடு, தொடர்புகள் அதிகளவில் முன்வைக்கப்பட்டன. அதே வேளை ஏனைய சமயங்களுடன் கிறீஸ்தவத்திற்குள்ள தொடர்பு பற்றியதாகவும் ஆய்வுரைகள் அமைந்திருந்தன.

மூன்று ஆய்வுரைகள் வழங்கப்பட்டன. முதலாவது உரையை அருட்திரு. ரெருன்ஸ் பரியஸ் அவர்கள் வழங்கினர். ''இந்திய இஸ்லாம் - முஸ்லீம் பண்பாடுகளும் அவற்றுடன் கிறிஸ்தவத்திற்குள்ள தொடர்புகளும்'' (Communication and Dialogue between Christians and Muslims - Islam in the Indian Context) பற்றியதான ஆய்வுரைக் கண்ணோட்டம் முன்வைக்கப்பட்டது.

''நவ சீனாவின் தொடர்புகள் - சமயம்'' (Communication and Religion in the Modern Chinese Context) பற்றி பேராசிரியர் குவாங் பு கொ வாங் (Prof. Huang Fu Ho wang) அவர்கள் ஆய்வுரை வழங்கினர்

குறிப்பாக நவசீனக்குடியரசில் சமயம் அதன் வழி சமூகத் தொடர்பாடல் எவ்வளவு இடர்பாடுகளின் மத்தியில் வளர்க்கப்படுகின்றது. அங்குள்ள மக்கள் எந்தளவிற்கு சமயக்கல்வியில் - வாழ்வில் ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பது பற்றியதான எண்ணக் கருக்கள் அவ்வாய்வுரைக் கண்ணோட்டத்தில் அமைந்திருந்தது.

பிற்பகல் இறுதி விரிவுரையை பேராசிரியர் ராக்காக்கி யசுகா (Prof. Takaki Yashoka) வழங்கினர், ''யப்பானிய பௌத்தத்தின் தொடர்புகள் - பண்பாடுகள்'' (Communication and Culture in the Buddhist Context Japan) பற்றியதான ஆய்வுரை இடம் பெற்றது.

யப்பானிய மக்களின் மத்தியில் உள்ள சமய நம்பிக்கைகள் - பௌத்த மதமும் - பண்பாட்டு வாழ்க்கையும் அங்குள்ள மக்கள் பின்பற்றும் பழமைகளும் விரிவாக எடுத்துக் காட்டப்பட்டன.

இவ்வாய்வுரைகள் முடிவடைய மாலை 5-00 மணிக்கு பிராந்திய ரீதியான கூட்டங்களுக்காக பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர். நாமும், தெற்காசிய கத்தோலிக்க பத்திரிகை சங்க (South Asian Catholic Press Association SACPA) பிராந்தியக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக குழுக் கலந்துரையாடல் மண்டபத்திற்கு விரைந்தோம்......

—(தொடருவோம்)—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிலையினர் ஆண்டு

பாப்பரசர்கள் 23ம் அருளப்பர், 6ம் சின்னப்பர் ஆகியோரின் பெரும் முயற்சியால் திருச்சபை ஒரு பெரும் மறுமலர்ச்சியைச் சந்தித்தது. அச்சந்திப்பின் பயனே 2ம் வத்திக்கான் திருச்சங்கம். சங்கத்தின் விளைவே 'சங்க ஏடுகள்' என்ற காலப்பெட்டகம். திருச்சபை பல புயல்களையும், பூகம்பத்தையும் எதிர்ப்புக்களையும் முறியடித்து கரையேறியதின் விளைவே 'சங்க ஏடுகள்' இதில்தான் பொது நிலையினரின் மகத்துவம் திருச்சபையில் உணரப்பட்டது. பொது நிலையினருக்கும் ஒரு பாரிய பணி திருச்சபையில் உள்ளது என்பதும் உணர்த்தப்பட்டது.

1962ஆம் ஆண்டு முதல் 1965ஆம் ஆண்டு வரை நடந்தேறிய இச்சங்கம் முடிவடைந்து ஆண்டுகள் 22க்கு மேல் கடந்துவிட்டது. ஆயினும் பொது நிலையினர் தம் பணியினைத் தொடங்கவில்லை. பொதுநிலையினர் ஒரு பங்கில் பணிபுரியாவிட்டால் அவ்விடத்தில் திருச்சபை இன்னும்

உண்மையாக வேரூன்றவுமில்லை
முழுமையாக வாழவுமில்லை
மனிதர் மத்தியில் கிறிஸ்துவின்
சின்னமாக வாழவுமில்லை.

இதை மனதிற்கொண்டே 1987 ஆம் ஆண்டை திருச்சபை பொதுநிலையினர் ஆண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. இவ்வாண்டு தூங்கியிருக்கும் பொதுநிலையினர் திரும்பவும் துயில் எழுந்து புத்துணர்வும், புத்தொளியும் பெற்று தமது பங்கு - மறைக்கோட்டம், மறைமாவட்டம் என்ற ரீதியில் கருத்தரங்குகளையும், ஒன்று கூடுதல் நிகழ்ச்சிகளையும் நடாத்த வேண்டும். தமது அழைப்பு பணிநிலை பற்றி ஆழச் சிந்தித்து செயற்பட வேண்டும்.

''திருச்சபை அழைக்கிறது
சமுதாயம் அழைக்கிறது''

பொதுநிலையினரே புறப்படுவீர் என்ற திருச்சபையின் அறைகூவலுக்குச் செவிசாய்க்க வேண்டும்.

மறைமாவட்ட மேய்ப்புப் பணிச் சபையினர் இவ்வாண்டு பல கருத்தரங்குகளை நடாத்தத் திட்டம் வகுத்துள்ளார்கள். இதன் முன்னோடியாக மட்./இருதயபுரம் பங்குத் தந்தை அருட்திரு. ஜோசப் டிக்கோணி அடிகள் தமது சிந்தனையில் எழுந்த எண்ணத்தைச் செயலாக்கினார். மாசித்திங்கள் 13ம் நாள் முதல் 15ம் நாள் வரை தமது பங்கின் சுமார் 60 பொதுநிலையினரைப் பயிற்சிப் பாசறை மூலம் வழிநடத்தினர். இதற்காக அருட்தந்தை ஈ. பிலிப் அடிகளும், அருட்தந்தை அ. தேவதாசன் அடிகளும், போதகர் கே. யேசுராசாவும் துணைபுரிந்தார்கள். இறுதி நாள் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் திருப்பலியுடன் பயிற்சிப்பாசறை நிறைவு பெற்றது.


இதைத் தொடர்ந்து தாளங்குடா தேற்றாத்தீவு, கல்லாறு பங்குத் தந்தையர்கள் தமது பங்கு மேய்ப்புப்பணிச் சபை உறுப்பினர்களுக்கும் ஒரு பயிற்சிப் பாசறையை நடாத்த எண்ணங்கொண்டனர். ஆயரின் அனுசரணையுடன் அருட்தந்தை ஏ. பிலிப், திரு. கே. யேசுராசா திட்டமிட்ட 3 நாள் பாசறை பங்குனி மாதம் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை தேற்றாத்தீவில் நடாத்தினார்கள். இக்கருத்தரங்கில் 72 பொதுநிலையினர் பங்கு கொண்டதுடன் அகில இலங்கைப் பொதுநிலையினர் கருத்தரங்கில் பங்குபற்றிய திரு. எஸ். தவராசா துணை புரிந்தமை பாராட்டுக்குரியது. பல புதிய கருத்துரைகள், குழுப் பயிற்சிகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. 2ஆம் நாள் ஆயரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டுத் திருப்பலியும் அருட்செல்வி ரில்டா (அ. கா.) அவர்களின் அருளுதேய — சந்தியா வந்தன தியானங்களும் 3ஆம் நாள் அருட்திரு. அ. தேவதாசன் அடிகளால் ஒப்புக்கொடுக்கப்பட்ட பண்பாட்டுத் திருப்பலியும், பாசறையை அணிசெய்தமை குறிப்பிடத்தக்கது.

செயலர்:

**கே. யேசுராசா**
தி. ம. மே. ப. சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதவியா? நீதியா?

அண்மையில் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு புகைவண்டியில் பிரயாணம் செய்தேன். வண்டித் தொடர்களை இளைஞர்கள் நிரப்பியிருந்தனர். 'யொவுண்புர' விழாவில் கலந்து களித்துவிட்டு ஆயாசத்துடன் திரும்பிக் கொண்டிருந்த கூட்டமது.

இந்நாட்டின் சில பகுதிகளில் ஆயிரக்கணக்கான இளைஞர்களை சிறைபிடித்தும், படுகொலை செய்தும், ஓட, ஓட விரட்டிக்கொண்டும், அவர்களின் எதிர்காலத்தையே சூன்யமாக்கிக் கொண்டிருக்கும் அரசு இன்னொரு பக்கத்தில் இளைஞர்களுக்கு விழா வெடுக்கிறது. இந்த போலித்தனத்தை இதற்குப் பின்னால் உள்ள திட்டமிட்ட திசை திருப்பலை எண்ணுதிருக்க முடியவில்லை. கனதியான பிரச்சினைகளிலிருந்து செயற்றிறன்மிக்க இளைஞர் உலகத்தை திசை திருப்ப முதலாளித்துவ அரச சக்திகள் எப்போதும் இத்தகைய செப்படி வித்தைகளை நடத்துவது வழக்கம். அதே வேளையில் சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும், சூடு சொரணையற்று வேடிக்கைக்காக - 'கலக்கலுக்காக' க்ளியாட்டம் தேடிச் சென்ற வெட்கம் கெட்டதுகளை நினைத்து வருந்தாமலிருக்கவும் முடியவில்லை. இந்த எடுப்பார் கைப்பிள்ளைகளை' நம்பியா இந்த இனம் காத்துக் கிடக்கிறது என்ற ஏக்கப் பெருமூச்சு எழுகிறது.

'யொவுண் புர' விழாவிலே சில அரசியல்வாதிகள் கேட்டுக் கேட்டு அலுத்துப்போன — புளித்துப்போன சில வார்த்தைகளைக் கொட்டியிருக்கிருர்கள். 'ஆயுதங்களைவைத்துவிட்டு வாருங்கள் நாம் பேசித் தீர்ப்போம்' இதை அங்குபோய்ச் சொல்லுங்கள்' என்று இங்கிருந்து போனவர்களுக்கு வேப்பிலை அடித்திருக்கிருர்கள்.

இனி எதைப் பேசுவது? எதற்காகப் பேசுவது? பேசித் தெரிந்துகொள்வதற்கு -புரிந்து கொள்வதற்கு எதுவுமே இல்லை. இந்நாட்டில் உள்ள பிரச்சினை என்ன? அதன் பின்னணி என்ன? இதைத் தீர்க்க வழி என்ன என்பது பெரும்பாலாருக்கு தெளிவாகத் தெரியும். அதைச் சில பெரும்பான்மை இனத் தலைவர்கள் கூட வெளிப்படையாகக் கூறி இருக்கிருர்கள். அதைச் செயற்படுத்த பலருக்கு விருப்பமில்லை. சிலருக்குத் துணிவில்லை. நீதியைச் செய்தால் பதவி பறிபோய்விடுமே என்ற பயம். உண்மையில் இங்கு இப்போது நடப்பது ஆயுதப் போராட்டமோ, இனப்போராட்டமோ அல்ல. பதவிப் போராட்டத்தில் பந்தாக ஒரு இனம் அடிபடுகிறது. இங்கு நீதிக்கு வாழ்வேது! பேச்சுவார்த்தைகளுக்கு பொருளேது! இந்நாட்டின் எதிர்காலத்தை — தேசிய நலனைக் கருத்திற்கொண்டு எனது பதவி போனுலும் பரவாயில்லை எனது அரசாங்கம் கவிழ்ந்தாலும் பரவாயில்லை நீதியைச் செய்வேன் என்று துணிந்து செயற்படக்கூடிய ஒரு தலைவன் இந்நாட்டில் உண்டா? பதவிக்காக பாதயாத்திரை போனவர்களும், இருபத்திநாலு மணிநேர சட்டம் பேசியவர்களும் அரசியல் பிழைப்பு நடத்தும் இந்த நாட்டில் தேசீயம்' எங்கே வாழப்போகிறது?


பதவிக்காக நீதியைக் கைகழுவும் நவீன பிலாத்துக்கள் கதிரையில் இருக்கும்வரை சிலுவைகள் தொடரும்; கல்வாரிகள் தோன்றும்

இந்நாட்டின் நலனில் — மக்களது வாழ்வில் உண்மையாக அக்கறை கொண்ட சிந்திக்கக் கூடியவர்களுக்கு நாம் சொல்லக்கூடியது இதுதான்? பதவியா? நீதியா? என்ற போராட்டத்தில் பதவி வென்ருல் அமைதி அழியும். நீதி வென்ருல் அமைதி வாழும்.

மலர்வேந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்

செ. குணரத்தினம்

## அத்தியாயம் 15

''பொய்மை முடிசூடாது போலி உயிர் வாழாது
மெய்மை என்றும் சாகாது தோழா''

— நிலா தமிழின் தாசன்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு வீரகத்தியைக் கண்ட ஆனந்தன் ஒரு மரியாதைக்காக மடித்துக்கட்டியிருந்த சாறனை அவிழ்த்துவிட்டுக்கொண்டு, ''என்னண்ண'' என்று விழித்தான். ''எப்படி புதிய தொழிலெல்லாம் போகுது? எங்க தம்பி இந்தப்பக்கம் வர எனக்கு ஏது நேரம். உங்கப்பா செத்தபிறகு என்ன இஞ்சாலப் பக்கம் கண்டிருக்கிறாயா? விடிஞ்சாப் பொழுதுபடுமட்டும் தோட்டம் துரவென்று ஒரே தோட்டத்துக்குள்தான் கிடந்துவிடியிறன். தம்பி ராமுவும் அட்வான்ஸ் சோதினைக்குப் படிக்கிறதாகக் கேள்வி. எல்லாம் செல்லையாண்ண அந்த நாளில செய்த நன்மதான் இண்டைக்கு அவர் செத்த பிறகும் உங்கட குடும்பம் நல்லபடியா இருக்கு!'' என்று சொல்லியபடியே வீரகத்தி ஆனந்தனைப்பார்த்து மெலிதாகச் சிரித்தான்.

வீரகத்தியை ஆனந்தனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆட்கள் வீரகத்தியைப் பற்றிக் கொடுமையாகப் பேசுவதெல்லாம் உண்மைதானா! என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது. அன்று தந்தை இறந்து சுடலையில் கொண்டுபோய் அடக்கம் செய்து விட்டு நின்றபோது ஓடிவந்து அவனோடு பேசிய வீரகத்திக்கும் இன்று நீண்ட இடைவெளிக்குப் பிறகு வந்து பேசுகின்ற இந்த வீரகத்திக்கும் எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

வீரகத்தி கிராம சேவகராக நீண்ட காலம் உத்தியோகம் பார்த்து ரிட்டயரானாலும் அவன் இன்னும் அதே வேலையைச் செய்பவனைப் போலதான் சுறுசுறுப்பாக ஊருக்குள் திரிகிறான். நல்ல அனுபவசாலி. அந்த நாளில் 8ம் வகுப்புவரை மட்டக்களப்பு சென்றல் கொலிஜில் படித்த ஆங்கில அறிவு இன்றும் அந்தக் கிராமத்தில் அவனுக்கு நல்ல மதிப்பைத் தேடிக்கொடுத்துக் கொண்டிருந்தது. உத்தியோகம் பார்க்கும் போதே நன்றாகத் தேடிப்போட்டதனால் இன்றும் அவனால் எந்த வித குளப்பமும் இல்லாமல் வாழ முடிகிறது. பிள்ளைகளும் அவனுக்கு டசின் கணக்கிலில்லை. கண்ணே கண்ணேயென்று ஒன்றேயொன்றுதான். இன் திருமணம் முடித்த வழியும் நல்ல பசைப் பிடிப்பான இடம். இவ்வளவு திமிரோடு மற்றவர்களை ஒட்டாமல் ஜமீந்தார் போக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்கதை

வாழ்ந்த வீரகத்தி, இன்று ஆனந்தனைக்கண்டு சைக்கிளை விட்டிறங்கி அவனோடு ஆதரவாகப் பேசியது இதுதான் முதல்தடவை. இப்படி இதற்கு முன் அவன் எவரோடும் பேசியதே கிடையாது.

ஆனந்தன் வீரகத்தியின் முகத்தைப் பார்க்க முடியாமல் அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தியபடி நிற்க வீரகத்தி கனிவோடு பார்த்து ''தம்பி'' என்றான். இப்படிக் கனிவான குரலில் வீரகத்தி அழைத்ததைக் கேட்ட ஆனந்தனுக்கு நிலமை பெரும் சங்கடமாகிப் போய்விட்டது நிமிர்ந்து பார்த்தான். ''தம்பி, எனக்கு அவசரமாக ஒரு இருபத்தையாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. நீ இல்லையென்றால் எனக்கு வேறு கதியேயில்லை. எப்படியும் வட்டியும் முதலுமாக உனக்கு நான் கூடிய கெதியில தந்து முடிச்சிப் போடுவன். உனக்குத் தெரியும் நான இந்த ஊரில மானம் மரியாதையோட தலைநிமிர்ந்து வாழ்ந்தனான்! இன்றைக்கு தலை குனிய வேண்டிய நிலைக்கு ஆளாகிப் போனன் நான் எனக்குத் தெரிந்தும் தெரியாமலும் எவ்வளவோ அட்டாதுட்டித் தனங்களைச் செய்திருக்கிறன் அத மறக்கல்ல. ஆனா இண்டைக்கு நான் அந்தப் பழைய வீரகத்தியில்ல. அனுபவம் தானே தம்பி ஒரு மனிசன முழுமைப்படுத்துது!''

வீரகத்தி பேச்சை நிறுத்தினான். ஆனந்தனுக்கு வீரகத்தி 25 ஆயிரம் ரூபாய் கடனாகக் கேட்டது மறந்துபோய் அவனுடைய உள்ளம் பேசியதை நினைத்து நினைத்து அனுதாபப்பட்டு இரக்கத்தோடு அவன் முகத்தைப்பார்த்தான்.

(தொடரும்)



## தாய்க்கு ஒரு தாலாட்டு

(தனது ஐம்பதாம் பிறந்த தினத்தில் தமது தாய்க்கு ஒரு குரு செலுத்தும் காணிக்கைப் பூக்கள்)

ஆசையோடு அரவணைத்து-என்னை இன்று பத்தைந்து
ஆண்டுகள் முன் பாசத்துடன் பெற்றெடுத்த தாயே!
அன்று 'மக்கள் சேவை மகேசன் சேவை'
என எனக்கு
அமுதூட்டி அறிவை வளர்த்த தாயே !
ஆண்டவரின் ஆலய சுடராய் எரிந்து இன்பக்
களிவீச
என் வாழ்வில் விளக்கேற்றி வைத்தாயே!
இந்நன்னாளில் நன்றிநவில உமக்கிணையாய்
எதைத்தான் ஈடாக்க முடியுமென்பாயே!
என்வாழ்வு எவ்வித கறை குறையுமின்றி
இறைதந்த முழுமதிபோல் பிரகாசிக்க செபிப்பாயே!


''மரி''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 40

(கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு நிகழ்ச்சிகள்)




பரிசு :

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**30 - 4 - 87**

முழுப்பெயர்: ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

## இடமிருந்து வலம்

1. தலைமைக் குருவின் ஊழியனுக்குத் துண்டிக்கப்பட்டது :
2. பாஸ்கா உணவில் ஒரு பகுதி:
3. இறுதி நாளில் இதனையும் சீடர் தங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என்று இயேசு கூறியது வியப்பாக இருந்தது.
4. இதன் பொருள் கடந்து போதல்
6. அக்காலத்தில் தலைமைக் குருவாக இருந்தவர்.
7. இயேசு பாடுகள்படவும் இறப்பதற்கும் அடிப்படைக் காரணம்:
8. பாஸ்காவுக்கு ஏற்பாடு செய்த இடம்:
9. பரிமளத் தைலத்தை இயேசுவின் உடல்மீது ஊற்றிய ஒருவர்:
10. இயேசுவின் தலைக்குமேல் வைத்த குற்ற அறிக்கையில் உள்ள ஒரு சொல்
11. இயேசுவின் இறுதி நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளைக் கண்ட நகரம் முடிவின்றி ஏங்கி நிற்கின்றது.
13. இதனைக் குடிப்பவர் இப்படித்தான் நிலைதடுமாறி நிற்பார்.
14. இயேசுவுக்கு இதனால் முடி சூட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மேலிருந்து கீழ்

1. யூதாஸ் எறிந்த வெள்ளிக் காசு இங்கே போடத் தகுதியற்றது என்றனர்.
2. இயேசு தந்தையை அழைத்த விதம்.
3. இயேசுவின் காலத்தில் பேர் போன கைதி.
5. இயேசுவுக்கு காவலுக்கு நின்றவன்.
8. கடவுளின் அரசு வரும் வரை இதனைக் குடிக்க மாட்டேன் என்று இயேசு சொன்னார்.
10. கெத்சமெனித் தோட்டத்துக்குப் போகுமுன் இதனைக் கடக்க வேண்டியிருந்தது.
12. சீமோன் இராயப்பரிடம் இது இருந்தது.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 38 முடிவுகள்

### இடமிருந்து வலம்

1. மனைவி
4. மலை
7. பகை (மை)
8. ஆகார்
11. சின்னப்பர்
12. பாவம்
13. கண்
14. கேபா
15. ஆண்டு

### மேலிருந்து கீழ்

1. மலடி
2. னைன்அ (அன்னை)
3. வேவு
4. மனிதன்
5. கொள்கை
6. அண்ணகர்
7. பர்னபா
8. ஆசி
9. சாபம்
10. இரண்டு
11. கண்

பங்குபற்றியோர்: 79
சரியான விடையளித்தோர்: 64

**அனைவருக்கும் எமது நன்றி.**

### பரிசு பெறுவோர் :

*1ம் பரிசு :*
செல்வி. ஜசிந்தா றேஸ் குரூஸ்
5, புனித செபஸ்தியார் வீதி
மட்டக்களப்பு.

*2ம் பரிசு :*
பெ. காமலீன் டிலாக்ஷனி
23, சுங்க வீதி
திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்:

1. E. L. சுபத்திரா குரூஸ்
மூதூர் 7.
2. அலோசியஸ் அகுஸ்தீன்
பங்குமனை
சொறிக்கல்முனை.
3. பொன்ராஜா ஜெயராணி
163/1 திருமலை வீதி
மட்டக்களப்பு.
4. அ. றெக்ஸ் ஜெயசீலன்
சொறிக்கல்முனை.
5. E. A. B. தேவராஜா
புனித வளனார் இளங்குருமடம்
விமான நிலைய வீதி
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 'மாசி' இதழ் அருமை

தொண்டன் மாசித்திங்கள் (1987) இதழ் கிடைத்தது. வழமைபோல் அருமையான ஆக்கங்கள் தொண்டனை அலங்கரிக்கின்றன.

சத்தியமே ஏன் உறக்கம், நமக்கேது விடிகாலை, விண்ணேறிப் பறப்பதேனே' ஆகிய கவிதைகளை மெய்மறந்து ரசித்தோம்.

ரெக்ஸ் ஜோசப் அவர்களின் 'விவிலியம் - இறைவனதும் மனிதனதும் சந்திப்பு' என்ற கட்டுரை பகுத்தறிவு வாதிகளுக்குப் பலத்த அடி! அறிவியல் கருதுகோள்களை அளவுகோலாகக் கொண்டு இறைவனின் வார்த்தைகளை வரையறுக்கும் மடமையை தொண்டன் இவ்வாறு அடிக்கடி கண்டிக்கவேண்டும் என விரும்புகிறோம்.

'பூஜைக்குரிய மலர்' சிறுகதை புதுமை. முடிவு சோகம். கதாசிரியைக்கு பாராட்டுக்கள்.

ஆர். எஸ். செல்வரெத்தினம்
(அல்வாயூர் வானொலி அபிமானிகள் மன்றம் விமர்சகர் குழாம் சார்பில்)

## நல்ல சிறுகதை

'பூஜைக்குரிய மலர்' சிறுகதை மிகவும் நன்றாக இருந்தது. அதனை எழுதிய நீற்ரு அரியநாயகத்துக்கு எனது பாராட்டுக்கள்.

A. செல்வராயன்
கல்முனை.

## விவிலிய அறிவு வளர...!

தொண்டன் மாசி இதழில் விவிலியம் - இறைவனதும் மனிதனதும் சந்திப்பு என்னும் கட்டுரை மிகவும் அருமையாக இருந்தது பாராட்டுக்கள். இதுபோன்ற கட்டுரைகளைப் பிரசுரித்தால் வாசகர்கள் விவிலிய அறிவைப் பெற ஏதுவாயிருக்கும்.

J. L. இம்மானுவேல்
அக்கரைப்பற்று.

## பாராட்டு

மாசித் தொண்டனில் வெளிவந்த 'பூஜைக்குரிய மலர்' சிறுகதைக்கும் 'சத்தியமே ஏன் உறக்கம்' கவிதைக்கும் எனது பாராட்டுக்கள்.

செல்வி ஜெசிந்தா அந்தோனிப்பிள்ளை
பாரதிபுரம் - திருமலை.

## விடியும்வரை காத்திரு!

மாசி இதழில் கவிஆரம் கண்ணுற்றேன். 'நமக்கேது விடிகாலை' என்னும் காலத்திற்கேற்ற கவிபடைத்த சிவா. பத்மநாதா! மாண்புடனே வாழ்வதற்கு விடியும் வரை காத்திருப்பாய்.

செல்வி ஜெசிந்தா ரேஸ் குரூஸ்
மட்டக்களப்பு.

## கவிஞர்க்கு வாழ்த்து!

மாசித் தொண்டனில் இதயக் கதவைத் திறந்து, அதன் உள்ளே இருந்தவற்றை காலத்திற்கேற்ப கொட்டிக் கோலமிட்ட கவிஞர் கட்கு வாழ்த்துக்கள். மற்றும் 'விவிலியம் இறைவனதும், மனிதனதும் சந்திப்பு' அருமை 'எதிரொலி' ஒலிக்கட்டும்.

T. பத்மா
பாண்டிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# புனிதவார சிறப்பு (வானொலி) நிகழ்ச்சிகள்

நாள்: 11, 12, 13, - 04 - 87 நேரம்: காலை 5 - 50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை, வழங்குபவர்: அருள் திரு அம்புரோஸ்

நாள்: 12 - 04 - 87 நேரம்: மாலை 6 - 30 மணி
புதிய உலகம், குருத்து ஞாயிறு சிறப்பு மலர் ✶ பவனி— உரைச்சித்திரம்
எழுதியவர்: எஸ். ஜெயராஜா

நாள்: 14 - 04 - 87 நேரம்; மாலை 6 - 45 மணி
சிறுவர் உலகம், ★ ஒளி - சித்திரம்

நாள்: 16 - 04 - 87 நேரம்: காலை 11 - 30 மணி
புதிய உலகம், புனித வியாழன் சிறப்பு மலர்
✶ மனதில் ஒரு மீளாய்வு - சித்திரம், எழுதியவர்: எஸ். ஜெயராஜா

நாள்: 17 - 04 - 87 நேரம்: காலை 10 - 45 மணி
புதிய உலகம் புனித வெள்ளி சிறப்பு மலர்
✶ அணைக்கும் கரங்கள் - இசை — உரைச்சித்திரம்
எழுதியவர்: ஜீவம் ஜோசப்

நாள்; 18 - 04 - 87 நேரம்: மாலை 7-00 மணி
புதிய உலகம், புனித சனி சிறப்பு மலர்
✶ தையலில்லாத ஆடை — சித்திரம்
எழுதியவர்: கல்வியூர் எம். கனகசிங்கம்

நாள்: 19 - 04 - 87 நேரம்: காலை 10-00 மணி
உயிர்ப்பு விழா வழிபாடு:- நேர்முக அஞ்சல்
இடம்:- திரு இருதய ஆலயம், இராஜகிரிய

நாள்: 19 - 04 - 87 நேரம்: மாலை 7-00 மணி
புதிய உலகம் ✶ தெருமாறிய திருக்குடும்பம் — நாடகம்
எழுதியவர்: நாவண்ணன்

நாள்: 25, 26, 27 - 04 - 87 நேரம்: காலை 5-50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர்: கே. ஜேசுராசா

நாள்: 28 - 04 - 87 நேரம்: மாலை 6-15 மணி
சிறுவர் உலகம்

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 08 - 04 - 1987ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org